UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
19-2-1986
LIBRARY

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 மாசி 7 ஜூ ஆகி 9 இதழ் 9
யாழ்ப்பாணம் புதன்கிழமை 19-2-1986

## முன்னாள் பிரிட்டிஷ் அமைச்சர் நீலனைச் சந்திப்பார்

[கொழும்பு]

வெளிநாட்டு அபிவிருத்தித் துறைக்குப் பொறுப்பாகவிருந்த முன்னாள் பிரிட்டிஷ்அமைச்சர் திருமதி ஜூடித் ஹார்ட் இலங்கை வந்துள்ளார்.

இவர் இலங்கையின் வட,

(5ம் பக்கம் பார்க்க)

## இந்தியப் படகின்மீது கடற்படை தாக்குதல்!

### ரூ. 10,000 வலை, மீன்கள் கொள்ளை!

[சென்னை]

இராமேஸ்வரம் கரைக்கருகே இந்திய மீனவர்களுக்குச் சொந்தமான மூன்று இயந்திரப் படகுகளை இலங்கைக் கடற்படையினர் தாக்கி, சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான மீன்களையும், வலைகளையும் நேற்றுமுன்தினம் அபகரித்

(5-ம் பக்கம் பார்க்க)



விடுதலையான திருமதி வில்லிசை பிரிட்டிஷ் தூதரக இரண்டாவது செயலாளர் திரு. மக்டெ மொட் கைகுலுக்கி வரவேற்பதையும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த செல்வி சாண்ட்ரா சிங்கருடன் திருமதி வில்லிஸ் உரையாடுவதையும், களை தீர அவர் குளிர்பானம் அருந்துவதையும் இங்கு காணலாம்.

படம்: 'தேவா'

# வில்லிஸ் விடுதலை

## கொழும்பு திரும்பினர்

(கா. யோகநாதன்)

**முல்லைத்தீவில் கடந்த மாதம் பதினேழாம்திகதி கடத்தப்பட்ட பிரிட்டிஷ் பிரஜை திருமதி பெனிலோப் ஈவா வில்லிஸ் (64 வயது நேற்று மாலை விடுவிக்கப்பட்டார்.**

'ஈரோஸ்' இயக்கத்தினால் நேற்றுப் பிற்பகல் 3-40 மணிக்கு விடுதலை செய்யப்பட்டு பிரிட்டிஷ் தூதரக இரண்டாவது செயலாளர் திரு மக்டெ மொட் முன்னிலையில் வைத்து பிரிட்டிஷ் செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதி சாண்ட்ரா சிங்கரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

யாழ். ஹோட்டல் அசோக்கில் செஞ்சிலுவைச் சங்கபிரதிநிதியும், பிரிட்டிஷ் தூதரக இரண்டாவது செயலாளரும், நேற்றுக் காலைமுதல் திருமதி வில்லிஸ்ஸின் விடுதலைக்காக காத்திருந்தனர்.

நேற்றுப் பிற்பகல் 3 மணிவரையும் எவ்விதத் தகவலும் கிடைக்காததினால், இருவரும் கொழும்பு புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தனர்.

[5ம் பக்கம் பார்க்க]

# உளவாளி என்பது

## எமது விசாரணையில்

## ஊர்ஜிதமாகியுள்ளது!

(ஏ. வி. மாணிக்கம்)

"திருமதி பெனி லோப் ஈவாவில்லிஸ் வடபகுதியிலுள்ள கிராம மக்களைப் பற்றிஆய்வு ஒன்றை மேற்கொள்வதாகக் கூறிக் கொண்டு, தமிழ்ப் போராளிகளை இனம் காணுவதுடன் அவர்களின் நடவடிக்கைகளை உளவறிவதே நோக்கமாகக் கொண்டிருந்தார்'' என்று தமது விசாரணையிலிருந்துதெரியவந்ததாக 'ஈழப் புரட்சி அமைப்பு' (ஈரோஸ்) பேச்சாளர் ஒருவர், நேற்று நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

நல்லூர் சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத்தில் பத்திரிகையாளர் மகாநாடு நடைபெற்றது.

புனர்வாழ்வுக் கழகத்தில் வைத்தே, கடத்திச் செல்லப்பட்ட திருமதி வில்லிஸ், செஞ்

[5-ம் பக்கம் பார்க்க]

### வயாவிளானிலிருந்து

## வெளியேறிய குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள்!

[மாவிட்டபுரம்]

வயாவிளான் பகுதியிலிருந்து வெளியேறிய 200 குடும்பங்கள் சுந்தரபுரம் என்னும் இடத்தில் தம் வாழ்க்கையை ஆரம்பிக்க பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளன. அவர்கள் தம்வாழ்க்கையை ஆரம்பிக்க உதவி கோருகிறார்கள்.

(5-ம் பக்கம் பார்க்க)

### ஓய்வூதியம் பெறச்சென்று

## விபத்துக்குள்ளானவரின் விபரம் கோரப்படுகிறது

[யாழ்ப்பாணம்]

இம்மாதம் 15-ம் திகதி ஓய்வூதியம் பெறுவதற்காக யாழ் கோட்டை கொடுப்பனவு காரியாலயத்திற்கு சென்று, விபத்துக்குள்ளாகி மரணமானவர்களினதும், காயமடைந்தவர்களினதும் விபரங்களை அறிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் விரும்புகிறார்.

மரணமானவர்கள், காயமடைந்தவர்களின் நெருங்கிய உறவினர்களோ அல்லது காயமுற்றவர்களோ உடனடியாக அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## இலங்கையில் தொடரும் வன்செயல்கள்: இலங்கைத் தூதரிடம் ராஜீவ் கவலை!

(ராய்ட்டர்)

இலங்கையில் தொடர்ந்து வன்செயல்கள் நிகழ்வது குறித்து இந்தியாவின் கவலையைத் தெரிவித்துள்ள இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி, இனப்பிரச்னைககு விரைவில் ஒரு அரசியல் தீர்வு காணவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் திரு பேர்னாட் திலகரத்ன, இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியை நேற்றுச் சந்தித்து, ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனவிடமிருந்து அனுப்பிவைக்கப்பட்டிருந்த கடிதமொன்றைக் கையளிக்கையிலேயே இந்தியப் பிரதமர் இலங்கை விவகாரம் குறித்து இந்தியாவின் கவலையை வெளியிட்டார்

இந்தச் சந்திப்பின்போது இந்திய வெளியுறவுச் செயலர் திரு ரொமேஷ் பண்டாரியும் உடனிருந்தார்.

அடுத்த சில நாட்ளில் திரு. ரொமேஷ் பண்டாரியும்

[5ம் பக்கம் பார்க்க]

## நேரடி மோதல்

[பூநகரி]

பூநகரி நாலாவது மைல்கல்லில் இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையில் இடம்பெற்ற நேரடி மோதலின்போது இராணுவத்தினர் தரப்பில் சேதமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[5-ம் பக்கம் பார்க்க]

## பதுளை - செங்கலடி பாலம் தகர்ப்பு!

[செங்கலடி]

கொடுவாமடுவில் பெருஞ்சாலையிலுள்ள ஒரு பாலம் குண்டுவெடிப்பினால தகர்க்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து செங்கலடி — பதுளைப் பாதை போக்குவரத்து ஸ்தம்பிதமாகியுள்ளது.

இதேவேளையில், ஆயித்தயமலையில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் எதிர்

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## தேவை

எமது அச்சகத்திற்கு அனுபவமுள்ள பைண்டர், கொம்பஸிட்டர் உடனடியாகத்தேவை. தொடர்பு சித்திரா அச்சகம், 310, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். [C 840]

வண்ணார்பண்ணை, கொக்குவில் பகுதியில் அமைந்துள்ள சகல வசதிகளுடன்கூடிய வீடு வாடகைக்கு உடன்தேவை. No: 52, பலாலி வீதி, கோண்டாவில். [C 839]

குளிரூட்டி குளிர்சாதனப் பெட்டி திருத்துவதில் அனுபவம்வாய்ந்த திருத்துனர் தேவை. தகுதிக்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: லீலா எந்திரவியல் தொழிற்சாலை, 147, கே.கே எஸ். ரோட், மாவிட்டபுரம், தெல்லிப்பளை. [C 2160]

10 கிறும்ஸ் தொடக்கம் 10 கிலோகிறும்ஸ் அல்லது கூடுதலான நிறையுடைய மேசைத் தராசு தேவை. யாழ். சயினீஸ் ரெஸ்ரோரன்ற், 124, R. R. நல்லையா வீதி, யாழ்ப்பாணம். [C 825]

நல்ல இன பசுக்களும், தென்னம்பிள்ளைகளும், பனை மரங்களும் விற்பனைக்குண்டு V P. சூரியா, 'செல்வமவல்', இல, 10, கல்லூரி வீதி, கொக்குவில். [C 831]

## விற்பனைக்கு

காங்கேசன்துறையில் மேல்மாடி வீட்டுடன் தொழிற்சாலை நடத்தக்கூடிய கட்டிடமும், கொழும்புத்துறையில் 10 பரப்பு காணியும், உடுவிலில் 4 பரப்பு காணியும், மாவிட்டபுரம் புகையிரத நிலைய வீதியில் 4 துண்டுக் காணியும், நல்லூர் வீரமகாகாளி கோவில் மேற்கு வீதியில் 1 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீ மாவை விநாயகர் மங்கள ஏஜென்சி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. கிளை: 52/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [C 776]

## மணப்பந்தல்

இந்து வேளாளர் 38 வயது ஆசிரியைக்கு வரன் தேவை. உயர்பதவியிலுள்ள இளைய சகோதரருடனான மாற்று சம்பந்தமும் கவனத்துக்கெடுக்கப்படும், தயவுசெய்து சாதகப் பிரதியுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. C 8 0 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 830]

இந்து வேளாளர் 37 வயது செவ்வாய்க்குற்றமுள்ள பட்டதாரி அரசாங்க உத்தியோகத்தருக்கு மணமகள் தேவை. 1, 2, 4 எண்காரரர் விரும்பப்படுவர். சாதகக் குறிப்பு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. C 829, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம், [C 829]

## WANTED

Wanted Tutors for A. A. T. Week-end Classes. Contact: Imperial Institutes, Ilavalai, [C 841]

## முதலாவதாண்டு நினைவஞ்சலி



திரு. பூபாலுப்பத்தர் விக்னராஜா
(லோகு)

ஆண்டவன் படைப்பு:
17-02-1956

ஆள்பவன் அழிப்பு:
15-02-1985

திதி: 20-02-86

எங்கள்அன்புச்செல்வமே! நீங்கள் மறைந்து ஓராண்டாகியும் உங்கள் நினைவு எம்மை விட்டகலவில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.

அன்புத்தாயார்,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள்,
பெருமக்கள்,
மருமக்கள்.

வழக்கம்பரை,
சுழிபுரம் தெற்கு.

C 690

## 1 ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கந்தையா
சிவக்கொழுந்து
(தவசெல்வம்)

மண்ணுலகு: 19-01-1925
விண்ணுலகு: 02-03-1985
திதி: 19-02-86

அன்பின் உருவாய், அறிவின் சுடராய் பண்பின் நிறைவாய் பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்து எமக்செல்லாம் நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே நீங்கள் எம்மை விட்டு பிரிந்து ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவு எமது இதயத்தைவிட்டு என்றென்றும் பிரியாது நிற்கும்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

அன்புக் கணவன்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்.

சந்தை வீதி,
காங்கேசன் துறை.

C 783

## குளியலறையில் ஏற்பட்ட தீ விபத்து

(டோக்கியோ)

குளியலறையில் தீப்பிடித்த தால்பத்து பெண்கள்உட்பட 25 பேர் அரைநிர்வாணமாக தெருவில் ஓடிய சம்பவமொன்று மத்திய டோக்கியோ நகரில் நடந்துள்ளது. இது பற்றிக் கூறப்படுவதாவது.

டோக்கியோ நகரில் அமைக்கப்பட்டுள்ள பொதுக்குளியலறையில் மின்சார ஒழுக்குக் காரணமாகத் தீப்பிடித்தது. இதனுல் ஒருமிதவெப்பக் குளியலுக்குத் தயாராகிக்கொண்டிருந்த இந்த 25 பேரும் தாம் உடுத்திருந்த அரைநிர்வாணக் குளியலுடுப்புடன் தெருவில் இறங்கி ஓடினராம். [செ]

## "வடமாகாணத்தில் கரபந்தாட்டப் போட்டி அபிவிருத்தி அடையவில்லை"

(யாழ்ப்பாணம்)

'கரப்பந்தாட்டப் போட்டியில் வடமாகாணம். மற்றைய மாகாணங்களைக் காட்டிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. கரப்பந்தாட்டப் போட்டியை விளையாடும் சகல கோஷ்டிகளும் பழையமுறையிலான 'ஓவாபோட்டி' முறையையே இன்னும் கடைப்பிடித்து வருகின்றது. புதிய முறையிலான செற்-அப் போட்டியை விளையாடுவதே கிடையாது''

இவ்வாறு வவனியா மாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோகஸ்தர் திரு. கே. ஏகாம்பரம் தெரிவித்தார்.

கரப்பந்தாட்டத்தின் அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல் ஒன்றை வடமாகாண விளையாட்டுக்கழகங்களிடையே எதிர்வரும் 24ம்திகதி யாழ் வை. எம். சி ஏ.மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடாத்த இருப்பதாகக் கூறிய திரு. ஏகாம்பரம் கரபந்தாட்டத்தின் வளர்ச்சியையும் இவ்விளையாட்டு தற்போது அடைந்து வரும் வீழ்ச்சியைப்பற்றியும் பின்வருமாறு தனது கருத்தை தெரிவித்தார்.

''எமதுபிரதேசத்தில்இன்று கரபந்தாட்டம் அடைந்திருக்கும் அபிவிருத்தியைப் பார்க்கும் பொழுது இந்தஈடுபாடும் ஆர்வமும் உள்ளவர்களுக்கும், இன்றும் கரபந்தாட்டத்தை ஆடிக்கொண்டிருப்பவர்கட்கும் மிகுந்த மனவேதனையைக் கொடுக்கின்றது.

''1950ம்ஆண்டுகாலகட்டத்திலும், அதற்கு முன்பும் அகில இலங்கையிலும் புகழ்பெற்ற கரபந்தாட்டக் கோஷ்டிகளையும் ஆட்டக்காரர்களையும் கொண்டிருந்த யாழ்ப்பாணப் பிரதேசம் இன்று ஒரு கோஷ்டியைத்தானும்அகிலஇலங்கை ரீதியில் தெரிவு செய்ய முடியாமல் இருக்கின்றது.

'பாசிங்கேம்' முறையில் கரபந்தாட்டம் ஆடப்பட்ட பொழுது அகில இலங்கையிலும் முதன்மை இடத்தைத் தட்டிக்கொண்ட அல்வாய் யூனியன் விளையாட்டுக்கழகம், உடுவில் ஸ்ரார் விளையாட்டுக் கழகங்களும், அதன்முதன்மை வீரர்களாகிய தியாகராசா மாஸ்டர் உடுவில் மணியம் போன்றோர் அகில இலங்கையிலும் முதல்தர ஆட்டக்காரர்களாகக் கணிக் ப்பட்டார்கள் அதன் பின் எமது கரபந்தாட்டத்திற்கு நடந்தது என்ன?

இலங்கையில்செற்அப்முறை கரபந்தாட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பொழுதும்கூட திரு. மு. சீவரத்தினம், திரு கே. நாதன், திரு. கதிர்காமத்தம்பி போன்றோர் அகில இலங்கை கோஷ்டியில் இடம் பெற்றுப் பிறநாடுகளுடனை போட்டிகளில் பங்கு கொண்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

செற்-அப்முறை தொடங்கி இன்று நாற்பது வருடங்களுக்குமேல் ஆகின்றன. ஆனுல் எமது பிரதேசத்தில் செற் அப்முறை இன்னும் பிரபல்யம் அடையவில்லை காலத்திற்குக் காலம் ஒரு சில கோஸ்டிகள் செற்-அப் முறையில் ஆடி மாவட்டரீதியில் பிரபல்யமாக இருந்திருக்கின்றார்கள். அவற்றுள் சில கோஷ்டிகளை இங்கு குறிப்பிட விரும்புகிறேன் அரியாலை வி.க., மட்டுவில் போகன்தாஸ் வி கழககம், காங்கேசன்துறை ஐக்கிய வி. கழகம், வல்வெட்டித்துறை ஐக்கிய வி க., வல்வை டைனமோஸ் வி. கழகம், ஆவரங்கால் ஐக்கிய வி. க. குறிப்பிடத்தக்கவை

கரபந்தாட்ட சட்டதிட்டங்கள் வீரர்களுக்கு எவ்வளவோ சாதகமாக இருந்தும் மத்தியஸ்தர்கள் அவற்றைப் பயன்படுத்துகிறார்கள் இல்லை. ஆகவே எமது சிறார்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பத்தைக் கொடுக்கும் பொருட்டு நல்ல மத்தியஸ்தர்களை உருவாக்கும் முகமாகவும்இந்தக்கரபந்தாட்டத்தில் ஈடுபாடுஉள்ளவர்களையும் போட்டிகள் நடாத்துபவர்களையும் கொண்ட ஒருகலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளேன்.

## பெயர் மாற்றம்

அச்சுவேலி தெற்கு சிவசக்தி கோவிலடியைச் சேர்ந்த துரைராஜா சின்னத்துரை என்பவருடைய பெயரை துரைராஜா ரகுகுமார் என்றும், துரைராஜா இராஜதுரை என்பவருக்கு துரைராஜா ரமேஸ்குமார் என்றும் பெயர்மாற்றம் செய்ய எண்ணியுள்ளேன். இதற்கு யாரும் ஆட்சேபங்கள் இருப்பின் எம்முடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகிறோம். ஆட்சேபங்கள் இல்லையாயின் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் சட்ட வாக்கங்களுக்கு அமைய இது நடைமுறைப்படுத்தப்படும்.

திருமதி ரூபவதி சகுந்தலா துரைராஜா
(தாயார்)

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

17-02-86. [C 832]

## யாழ். மக்களுக்கு ஓர் நற்செய்தி

வெளிநாட்டுப் பயணத்திற்கான விமான டிக்கட்டுகள், பாஸ்போட், விசா, பிரயாணிகள் காசோலைகள்

மற்றும் பிரயாணங்களுக்குத் தேவையான சகல ஒழுங்குகளும் செய்துதரப்படும்.

தொடர்பு கொள்ளுங்கள்:

**விஜயமாலா ரவல்ஸ்,**

213, 215, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி: 547205

நேரில் தொடர்புகொள்ள முடியாதவர்கள் யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ளவேண்டிய விலாசம்:

திருமதி சி. கஜமுகலிங்கம்,
ரஜனி நிலையம், ஊரியாட்டி, சுன்னுகம்.

9315

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

### குவைத், டுபாய்

★ ஹவுஸ் மெயிட் — முஸ்லிம் — குவைத் 2 வருடங்கள் — கே. டி. 30
★ ஹவுஸ் மெயிட் — முஸ்லிம் அல்லாதவர் — குவைத் — 2 வருடங்கள் — கே. டி. 30
★ ஹவுஸ் மெயிட் — முஸ்லிம் — டுபாய் — 2 வருடங்கள் — 400 — 500 திராம்ஸ்
★ ஹவுஸ் மெயிட் — முஸ்லிம் அல்லாதவர் — டுபாய் — 2 வருடங்கள் — 400 — 500 திராம்ஸ்
★ பேபி சிட்டர் — டுபாய் — 2 வருடங்கள் — 400 — 550 திராம்ஸ்

தயவு செய்து 5 பாஸ்போட் அளவு படங்கள் 2கலர்ப்படம்''போஸ்காட்''அளவுடன்கல்வி, தொழில், அனுபவச்சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தைத் தவிர மேலதிகமாக எதுவும் வசூலிக்கப்படமாட்டாது.

**சாய் ஏஜென்சி** 21. வில்சன் வீதி, கொழும்பு - 12.

தொழில் அனுமதி இல. 289
அங்கீகாரம் ஏ/எல்/289/1/85
ஏ/எல்/289/2/86

(A 261)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமர் பதவியிலிருந்து விலக மாட்டேன் என்கிறார் தாட்சர்!

உலகச் செய்திகள்

(லண்டன்)

**பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிறட் தாட்சர், எக்காரணம்கொண்டும் பதவிவிலகப்போவதில்லை என்றும், அடுத்த பொதுத்தேர்தலுக்கும் தனது கட்சிக்குத் தானே தலைமைதாங்கப்போவதாகவும் அறிவித்துள்ளார்.**

திருமதி தாட்சர் லண்டன் பி. பி. ஸி, தொலைக்காட்சிச் சேவைக்களித்த பேட்டி ஒன்றிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அண்மைக்காலத்தில் பெரும் சர்ச்சைக்குள்ளான வெஸ்ட்லான்ட் ஹெலிக்கொப்டர் கம்பெனி விவகாரத்திற்குப் பின்னர் அவர் அளித்த முதலாவது பிரதான பேட்டி இதுவாகும்.

அவர் தனது பேட்டியில்; இன்னும் இரு வருடங்களுக்குள் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் தனது கன்சர்வேட்டிவ் கட்சிக்கு தானே தலைமைதாங்கப்போவதாகவும், இப்பதவிக்கு ஏதாவது போட்டி ஏற்படுமானால் தான் விட்டுக்கொடுக்கப்போவதில்லை எனவும் கூறியுள்ளார்.

பிரிட்டிஷ்மக்கள் முன்னரைவிட இப்போது நன்றாக இருக்கிறார்களெனவும், ஏனைய ஐரோப்பிய நாடுகளைவிட இங்கிலாந்து இப்போது அதிகளவில் பொருட்களை உற்பத்திசெய்கிறதெனவும், மக்கள் அதிகமாக சேமிக்கக் கூடியதாக உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இந் நன்மைகளெல்லாம் தனது அரசாங்கத்தில் காணப்படும் முதலாளித்துவக்' கொள்கையினாலேயே விளைந்ததென்றும் கூறிய அவர், 'வெஸ்ட்லாண்ட்' விவகாரத்தில் தான் கடைப்பிடித்த கொள்கையை பாதுகாத்துப் பேசினார்.

திருமதி தாட்சர் கடந்த பதினொரு வருடங்களாகக் கன்சர்வேட்டிவ் கட்சிக்குத் தலைமைதாங்குகிறார். கடந்த இரு பொதுத்தேர்தல்களிலும் அவரது கட்சியே வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. [செ]

## 'சாலஞ்சர்' விபத்து பற்றி மேலும் தகவல்கள்

(வாஷிங்டன்)

சாலஞ்சர் விண்வெளி ஓடத்தின் வலப்பக்க உந்து ரொக்கட்டில் ஏற்பட்ட ஒரு வெடிப்பே அவ்வோடம்வெடிக்

(7-ம் பக்கம் பார்க்க)

## "இலங்கை இனப்பிரச்னையைத் தீர்க்க இந்தியா முயற்சிக்க வேண்டும்!"

### பாரத (மார்க்.) கம்யூ. மகாநாடு கோரிக்கை

[கல்கத்தா]

இலங்கை இனப்பிச்னையை சமாதான முறையில் தீர்த்து வைப்பதற்கு இந்தியா முயற்சி எடுக்க வேண்டும் என்ற தீர்மானம் கல்கத்தாவில் நடத்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிய பிரிவு) 12வது மாநாட்டில் நிறைவேறியது

அத்தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: ''இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்களான ஆண்கள், பெண்கள், குழந்தைகள் படுகொலை செய்யப்படுவதை பலமாக ஆட்சேபிக்கிறோம்.

''பிரிட்டிஷ்கூலிப்படைகள், மொசாட்டின் ஒத்துழைப்புடன் இராணுவ தீர்வுகாண முயற்சி எடுக்கப்பட்டால் அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடுகள் தலையிட நேரி

(7-ம் பக்கம் பார்க்க)

## மகாராணி நேபாளம் விஜயம்

[காத்மண்டு]

இரண்டாம் எலிசபெத் மகாராணியார் நேபாளத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்

தனது கணவர் இளவரசர் பிலிப்புடன் விஜயத்தை மேற்கொண்டிருக்கும் மகாராணி நேற்று நேபாள மன்னர் பிரேந்திரா அளித்த விருந்தொன்றில் கலந்துகொண்டார். [செ]

## இந்தியாவில்சி.ஐ.ஏ.விவகாரம் பம்பாயில் விசாரணை பூர்த்தி

[பம்பாய்]

ராமா ஸ்வாரப் என்ற இந்திய வர்த்தகரின் உளவு நடவடிக்கை குறித்த விசாரணைகள் பம்பாயில் பூர்த்தியடைந்துள்ளன.

இவர் அமெரிக்காவின் உளவுஸ்தாபனமான சி ஐ ஏ. மற்றும் பல வெளிநாட்டு உளவுநிறுவனங்களுக்காக இந்தியாவில் வேலைசெய்தார் என்று கூறப்படுகிறது.

இந்தியாவின் தற்பாது காப்பு வல்லமை குறித்த தகவல்களையும் மற்றும் அறிக்கைகளையும் இந்தியாவில் உள்ள தனது ஏஜண்டுகளின் மூலம் சி ஐ. ஏ. தலைமையகம் பெற்றுவந்துள்ளது என்றும் இதற்காக மேற்கு ஜெர்மனி, இஸ்ரேல், தாய்வான் ஆகிய நாடுகளில் உள்ள உளவு சேவைகளின் உதவிகளையும் அது பெற்றுள்ளது என்றும் இந்தியப் பத்திரிகைகள் எழுதுகின்றன.

இக் கூட்டு நடவடிக்கைகளினூடாக, இந்தியாவின் அரசியல் அமைப்பையும் சோவியத்யூனியன் உட்பட்ட பல நாடுகளுடன் இந்தியா கொண்டுள்ள நட்புறவுகளையும் சீர்குலைக்கவும் சி ஐ. ஏ. முயன்று வருகிறது என்று ''அமிர்தா பஸார் பட்ரிகா'' என்ற பத்திரிகை எழுதியுள்ளது.

ராமா ஸ்வாரப்புடன் தொடர்புகொண்டிருந்த பல சி. ஐ. ஏ. அதிகாரிகளின் பெயர்ப்பட்டியல் ஒன்றும் விசாரணைகளின் விளைவாக வெளிவந்துள்ளது.

இந்திய மத்திய அரசில் உள்ளவர்கள், இந்தியப் பிரதமரின் உதவியாளர்கள், ஆலோசகர்கள், இந்திராகாந்தி ராஜீவ்காந்தி ஆகியோருடன், தொடர்பான பல ராஜ்யங்களின் முதன்மந்திரிகள் ஆகியோர் பற்றிய ரகசியத் தகவல்களை இந்திய ஏஜண்டுகளின் மூலமாக சி. ஐ ஏ. ஏஜண்டுகளும், மேற்கு ஜெர்மன் தூதரக அதிகாரியான ஆர் ப்ரெய் டென்ஸ்டியனும் பெற்றுவந்துள்ளனர்.

## பத்திரிகை அதிபர் பெரும் கோடீஸ்வரர்

புதன் மஞ்சரி

பத்திரிகைத்துறையில் பல கோடீஸ்வரர்களைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் இந்தியாவிலும் பலர் இருப்பது எல்லோருக்கும் தெரியாது

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையின் அதிபர் 100 கோடிக்கு மேல் ஆஸ்தியுள்ளவர். இந்தியாவில் ஒரு கோடி எண்பது லட்சம் மக்கள் பத்திரிகை படிக்கும் வழக்கம் இருந்தால் இருபது லட்சம் வாசகர்கள் இவரது பத்திரிகையை படிக்கிறார்கள். கோர்னுவ் என்பவரே இதன் அதிபர்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆறு மாநிலங்களில் வெளிவருவதுடன், தமிழ், வங்காளம், மலையாளம் ஆகிய மொழிகளில் பல்வேறு பத்திரிகை வெளியிட்டுவருகிறார்.

இவரது பம்பாயிலுள்ள 28 கட்டிடங்களின் மொத்த பெறுமதி 25 கோடி ரூபா. இவர்தேசியவாதியாக இருந்தும் காஞ்சி காமகோடி சுவாமிகளை 'Chap' என பேட்டியொன்றில் (Illustrated Weekly) கூறியதனால் பெரும் எதிர்ப்பைச் சம்பாதித்துள்ளார். 'தினமணி' இவரது தமிழ் பத்திரிகை.

★ ★ ★ ★ ★

### 'சாஸ்ஜ்' கொமண்டோ!

சாஸ்ஜ்(Sasg) கொமாண்டோ.

இந்தப் பெயரைக் கேட்டவுடன் ஏதோ ஒரு அதிரடி அல்லது இராணுவப் படைப் பிரிவின் பெயர் என்று எண்ணி விடாதீர்கள்.

அமெரிக்காவில் இயங்கும் இந்த பிரிவு ஆகாயம், தரை, கடல் எவ்வழியாலும், இந்தப் பூகோளத்தின் எந்தப் பகுதிக்கு ஆபத்து ஏற்பட்டாலும்உடனே விரைந்து சென்று ஆபத்திலகப்பட்டவர்வர்களைக் காப்பாற்றும் மருத்துவர்கள், தாதிகள் மற்றும் பல்வேறு வகையான உதவியாளர்களைக் கொண்டது இந்தப் பிரிவை ஒரு பறக்கும் மருத்துவமனை என்றே கூறலாம். [கி]

### யேசுபிரான் பயணம்செய்த படகு

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள்பழைமை வாய்ந்ததும், இயேசுநாதரை ஏற்றிச் சென்றது என்றுகருதப்படுவதுமான ஒரு படகை இஸ்ரேலியமீனவர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

கலிலி கடற்கரையில் கண்டு பிடிக்கப்பட்ட இப்படகு எட்டரை மீற்றர் நீளமுள்ளதாகக் காணப்படுகிறது.

இப்படகிலே இயேசுநாதரும், சீடர்களும் ஜெனேசாருக்கு பிரயாணம்செய்திருக்கலாமென ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

### காபில்தேவ் வெளியீடு

இந்தியாவின்'சுப்பர் ஸ்ரார்' காபில்தேவ் தனது வரலாற்றை நூலாக வெளியிட்டுள்ளார்.

இந்நூல் அண்மையில் 'காபில்தேவ்' என்ற தலைப்பில் அவுஸ்திரேலியாவில் வெளியிடப்பட்டுள்ளது.

103 பக்கங்களையுடைய இந்நூல், அவுஸ்திரேலியாவில் பிரபலம் பெற்றுள்ளது இளைய தலைமுறையில் தனதுவரலாற்றை எழுதியவருள் காபில்தேவ் முதன்மை பெற்றுள்ளார்.

## மீண்டும் முதலமைச்சரானார்

(புதுடில்லி)

கர்நாடக முதலமைச்சராக ராமகிருஷ்ண ஹெக்டே மீண்டும் பதவி ஏற்றுள்ளார்.

பெங்களூரில் நேற்று பதவிப் பிரமாண வைபவம் நடைபெற்றது.

மாநில கவர்னர் திரு. ஏ. எம். பானாஜி தலைமையில் நடந்த பதவிஏற்பு வைபவத்தில் ராமகிருஷ்ண ஹெக்டே பதவிப் பிரமாணத்துடன் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து கொண்டார். திரு. ஹெக்டேயின் மந்திய 29 அமைச்சர்களும் பதவிப் பிரமாணம் செய்தனர். [ச]

## மீண்டும் கலவரம்: 9 பேர் பலி!

[கேப்டவுண்]

தென்னாபிரிக்காவில் கடந்த மூன்று நாட்களாக ஏற்பட்ட கலவரங்களில் ஒரு கறுப்புப் பொலிஸ்காரர் உட்பட ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜோகனஸ்பேர்க்கின்அலெக்ஸாண்ட்ரா நகரில் கடந்த மூன்று தினங்களாக நடந்த கலவரங்களில் அப்பகுதியில் ஒரு கறுப்பினப்பொலிஸ்காரர் கொல்லபபட்டதாகவும், வேறு 3 கறுப்பினத்தவர்கள் கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜோகர்னஸ்பேர்க்கை அண்மித்த நகரான சுவேட்டோ நகரிலும் கலவரங்கள் மூண்டுள்ளன. [செ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஐம்பொறியையடக்கிடல் வீரமே
வெம்பகையை விடுவது வீரமே
நம்பன் பாதத்தை நண்ணுதல் வீரமே
தம்மைத் தம்மால் அறிவது வீரமே

— சிவயோக சுவாமிகள்.

# நமது நோக்கு

## ஜே. கிருஷ்ணமூர்த்தி

முக்கிய மாநாடு ஒன்றுக்கு பிரதமர் நேரு கொழும்பு வந்தபோது அவர் தங்கிய இடத்திலிருந்து காலைப்பொழுதில் எவரும் காணுதவாறு வெளியே சென்றுவிட்டார். இந்தியப் பிரதமர் எவ்வித பாதுகாப்புமின்றி எங்கு சென்றுர் என்ற செய்தி பரபரப்பை ஏற்படுத்தியது.

சில நிமிடங்களில் வீடு திரும்பிய நேரு ''நான் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தியை சந்தித்துவிட்டு வருகிறேன், இந்தியாவிலேயே அவரை இவ்வாறு இலகுவாகக் காண முடியாது'' என்று சிரித்தாராம்.

இந்தியப் பிரதமர் நேரு மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும் வாழும் மக்கள் தங்கள் தனிப்பட்ட பிரச்னைகளை அவருடன் அளவளாவி ஆறுதல் அடைவது நெடுங்கால வழக்கமாகியிருந்தது.

இன்று தமது 90ஆவது வயதில் கலிபோர்னியாவில் மறைந்த இத் தத்துவ மாமேதை, புற்றுநோய்க்குப் பலியானுரென்ருல் வங்கத்தின் ராமகிருஷ்ண பரமஹம்சரையும் திருவண்ணுமலை ரமணமஹரிஷியையும் இச் செய்தி நினைவுபடுத்துகிறது.

கடவுளைக் கண்ட மகான் நீங்கள்; எனவே இந்தப் புற்றுநோயை மாற்ற ஏன் முடியாது என்று கேட்டவருக்கு பரமஹம்சர் புன்முறுவலுடன் ''இதனை நோயென்று நான் வருத்தப்படாது தாங்கிக்கொள்வதையே நான் கண்ட கடவுள் என்னிடம் எதிர்பார்க்கிருர்'' என்று விடையளித்தார்?

ரமண மகாரிஷியை வருடாவருடம் தரிசிக்கும் அடியார்கள் யாழ்ப்பாணத்தில் அக்காலத்தில் அநேகர் இருந்தனர். ஒருசமயம் அவர் கையைப் பீடித்திருந்த புற்றுநோய் பற்றி அடியார் ஒருவர் கேட்டபோது, கிடைத்த விடை மௌனமும் புன்முறுவலுமே என்று நேரில் கண்டவர்கள் சொல்லிய கதை.

இன்று மறைந்த ஞானச்சுடர் இந்தியா உலகுக்களித்த ஞானிகள் பரம்பரையைச் சேர்ந்தபோதும் அவர்களின் போக்குக்கு பெரிதும் மாறுபட்டவர் இவர் என்று கொள்ளலாம்.

புத்தர், அசோகர், அக்பர், காந்தி என்ற வரிசை தனித்தத்துவ ஞானவரிசை அல்ல. அருளியலையும் அரசியலையும் ஒன்றுடன் ஒன்று பிணைத்து உலகம் உய்யும் வழியைக் காட்டிய தீர்க்க தரிசிகள் இவர்கள்.

ஆந்திர பிரதேசத்தில், மதனப்பள்ளி என்னும் ஊரில். ரிஷி பள்ளத்தாக்கு (Rishi Valley) என்ற இடத்தில் பிறந்த கிருஷ்ணமூர்த்தி இளம் வயதிலேயே தமது பேராற்றலையும் அருள்ஒளியையும் வெளிப்படுத்திய அற்புத இளைஞர் என்று பாராட்டப்பட்டார்.

இந்தியாவுக்கு சுயஆட்சி (பூரண சுதந்திரம் அல்ல) வேண்டுமென்று போராடிய ஆங்கிலப் பெண்மணி பெசண்ட் அம்மையாரின் கண்ணில் அகப்பட்டார்.

கிறீஸ்துவிற்குப் பின் இவரே — கிருஷ்ணமூர்த்தியே உலகம் காத்திருக்கும் மீட்பர் (Messiah) என்று பெசன்ட் அம்மையார் பிரகடனப்படுத்திஞர்; அதற்கேற்ற வகையில் அவருக்கு எல்லாவிதமான மேஞட்டு பல்கலைக்கழகப் பயிற்சியும் ஞானவளர்ச்சிக்கேற்ற பல வசதிகளையும் தேடிக் கொடுத்தார்.

அவையெல்லாம் தம்மைச் சிறைப்படுத்தும் சூழ்நிலையே என்று அனைத்தையும் உதறித்தள்ளிஞர். குரு-சீடன் என்றநிலை ஒரு போதும் சத்தியத்தைத் தேடி அடையும் முயற்சிக்கு உதவாதுஎன்று தனிப்பட்ட தற்பரிசோதனையில் ஈடுபட்டு வாழ்வதே அதற்கு வழி என்று தம் வாழ்க்கை முறையை மாற்றிக்கொண்டார். பலருக்கு இது ஏமாற்றம் அளித்தது.

இத்தகைய பேராற்றல் படைத்த மெய்ஞ்ஞானிகள் விஞ்ஞானிகள் ஒனறுபட்ட கூட்டம் ஒன்று அமெரிக்காவின் கலிபோர்னியாவில் சஞ்சரித்து வருவதை இன்றும் காணலாம்.

அவர்களிற்பலர் மறைந்த போதும் தாம் தம்முடைய உலக யாத்திரையைத் தவருது இருவருடத்துக்கு ஒரு முறை மேற்கொண்டு வந்தார்.

முழுமையான கல்வியே மனிதனின் இயல்பாக அமைந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்தவல்லது என்பது அவருடைய அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று.

''விஞ்ஞானம் வேறு ஆன்மஞானம் வேறு என்று பாகுபடுத்தும் கல்வி முறையே இன்று உலகில் ஏற்பட்டிருக்கும் குழப்ப நிலைக்குக் காரணம். இதனை ஒழிக்கப் பாடசாலைகளின் கல்விமுறை மாறவேண்டும்' என்று ஒளிவீசும் கண்களில் பொறி பறக்கும் வகையில் புலமை நிறைந்த பேச்சைக் கேட்பவர்கள் பரவசப்படுவது நாம் கொழும்பில் கண்ட காட்சி.

சமயங்கள், சமயச்சான்ருேர்கள் அல்ல தாமே தம் உள்ளத்தைப் பண்படுத்தி மலரச்செய்வதில்தான் வாழ்க்கையின் பயன் தங்கியுள்ளது. இதனை அழுத்தமாகப் போதித்தும் சாதித்தும் வந்த பெரியார் இந்த நூற்ருண்டின் சிறந்த சிந்தனையாளர் என்று மதிக்கப்பட்டார்.

பொன்னையும் பொருளையும் ஆட்சி அதிகாரத்தையும், உண்மைக்குப் பதிலாகப் பிரசாரத்தையும் நாடி நிற்கும் இன்றைய உலகுக்கு இத்தகைய ஒளி இடைக்கிடை மின்னுவதால் பலனில்லாது போவதில்லை.

மறைந்த ஞானியின் மறக்கமுடியாத பேச்சு வன்மையை ஒலிப்பதிவு நாடாவில் கேட்டு மகிழ்வோர் இன்று பல்லாயிரம்.

# தத்துவமேதை கிருஷ்ணமூர்த்தியின் மறைவு

புற்றுநோய் பரவுவதற்கு வீட்டுக் கூரைக்கும், அறைகளுக்கும் அஸ்பெஸ்டஸ் தகடுகள் உபயோகிப்பது ஒரு முக்கிய காரணம் என நேற்றிரவு இலங்கை ரூபவாஹினியில் அறிவிக்கப்பட்டது. அதனை அடுத்து வந்த இந்திய ஆகாசவாணிச் செய்தியில் உலக மேதை ஜே. கிருஷ்ணமூர்த்தி புற்றுநோயினுல் காலமானுர் என தெரிவிக்கப்பட்டது. இருபதாம் நூற்ருண்டில் மூன்று இந்திய மெய்ஞ்ஞானியர்களைப் புற்றுநோய் கொள்ளை கொண்டது இம்மும்மூர்த்திகளுள் ஒருவர் கிருஷ்ணமூர்த்தி, மற்றையோர் ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சரும், ஸ்ரீ ரமணரிஷிகளுமாவர். இவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை அறியும்போது இவர்கள் ஒருவரும் சாதாரண நோயாளிகளைப் போலப் புற்றுநோயினுல் வருந்தியதாகப் புலப்படவில்லை. இவர்கள் மூவரும் பிறவிப்பெருங்கடல் நீந்தியவர்கள். திருவள்ளுவர் கூறியதுபோல இவர்கள் இளம் வயதிலேயே இறைவனடி சேர்ந்தபேருகப் பிறவிப் பெருங்கடல் நீந்திஞர்கள் என்பது சிறப்பாகும்.

நாம் இன்று என்ன செய்கிருேம்? பிறவிப் பெருங்கடலை முதலில் நீந்திப் பின்பு இறைவனடி சேரமுயற்சிக்கிருேம. இறைவன் அடி எங்கோவொரு தூரத்தில் இருப்பதாகவும், அதைக் கடல் நீந்தித்தான் அடைதல்வேண்டுமெனவும் கற்பனை செய்கிருேம். எனவே வாழ்க்கை பூராகவும் கடலை நீந்திக் கரைசேரும் முயற்சியிலேயே ஈடுபட்டுக்காலம் கடத்துகிருேம். கரைசேருதலை முன்பாகவும் இறைவனடி சேருதலைப் பின்பாகவும் கருதி இடர்படுகிருேம். மெய்ஞானியர்களோ இவ்விதம் இடர்ப்படுவதயகப் புலப்படவில்லை. பகுத்தறிவைக் கொண்டு பார்க்கும் போது, கரைசேராது இறைவனடியை அடைதல் இயலாதெனவே தென்படுகிறது. சமயச் சடங்குகளாகிய முயற்சியில் ஈடுபட்டு சம்சாரசாகத்தை நீந்திய பின்பே இறைவனடி சேரலாம் என நம்புகிருேம் இந்த நம்பிக்கையே எம்மைக் காப்பாற்றுமென உறுதிகொண்டு அல்லும் பகலும் செயற்படுகிருேம். வள்ளுவன் காட்டிய வழி நமக்கு நன்கு புலப்படவில்லை.

### 90 வயதில்

மதருஸ் மறீனுவிலே தவழ்ந்து லண்டன் தேம்ஸ் நதிக்கரையிலே ஓடிவிளையடிப் பயின்று உலகம் சுற்றும் தொண்டனுகவும், உத்தம மேதையாகவும், தத்துவ ஞானியாகவும் விளங்கிய கிருஷ்ணமூர்த்தி தமது தொண்ணூருவது வயதிலே அமெரிக்காவிலுள்ள கலிபோனியா நகரத்தில் அவரால் அமைக்கப்பெற்ற கல்விநிலையத்தில் 16-2-86ம் திகதி இரவு காலமானுர். காலமானுர் என்பதைவிட அமரத்துவம் எய்திஞர் என்பதே பொருத்தம் உடையதாகும். மரணமிலாப் பெருவாழ்வு எய்திய மெய்ஞானியை. நாம் மரணம்

### நா. செல்லப்பா

அடைந்துவிட்டாரென நினைந்து ஓலமிடுவதிற் பிரயோசனமில்லை. பெரியோர்களுடைய வாழ்க்கை வரலாறு நமக்கு எதை நினைவூட்டுகிறது. அவர்களை சரிவரத்தெளிந்து உணர்வதனுல் நாமும் நமது வாழ்க்கையைப் புனிதப்படுத்தி உயர்வுகொள்ள நாம் என்பதையே ஞாபகப்படுத்துகிறது. அவருககு நாம் செய்யக்கூடிய கைம்மாறு ஒன்றுமில்லை. அப்படி ஏதாகினும் ஒன்று இருக்குமாயின் அது நிச்சயமாக அவருக்குச் செய்யும் தொண்டாக முடியாது அது அவர் காட்டிய எதிர்மறைநிலைச்சாதனை மூலம் விருப்புணர்வுடன் கூடிய இருமைவகையற்ற தியானம் வாயிலாக நாம் மெய்யுணர்தலாக முழுமையான உண்மை விளக்கம் பெறுதலேயாகும்.

### பிராமணச்சடங்குகள்

அன்னிபெசன்ட் அம்மையார் கிருஷ்ணமூர்த்தியைத் தமது சுவீகரிப்பு மகனுக வளர்த்து. அவதாரபுருஷனுக்க முயன்ருர். அது கைகூடவில்லை கடவுள் அவதாரங்களில் அவ நம்பிக்கை கொள்ளவில்லை தமிழ்ப் பிராமண குலத்தில் பிறந்த அவர் தன்னை ஒரு பிராமணனுக என்றும் விளம்பரம் செய்ததில்லை. பிராமணீய நெறியை அவர் பின்பற்றியதுமில்லை. அதற்கு மாருக பிராமணச் சடங்குகளால் ஒருவர் இன்னெருவரை இரட்சித்து வீடுபேறு காடுததல் இயலாதெனத் தெளிவுபடுத்திஞர் சத்தியம் பாதையற்ற உலகம்எனப் புகன்ருர். இவ்வுண்மையைச் சரிவரவிளங்கிக்கொள்ள இயலாது பல பண்டிதர்கள் கூட இடர்ப்படுகின்றனர். இந்து மதம் சத்தியமாகிய சச்சிதானந்தனை அடைய சர்சம் பக்தி யோகம் ஞானமாகிய நன்கு பாதைகளை வகுத்துள்ளது. இவற்றைப் படிமுறைக் கிரமமாகப் பின்பற்றிஞல் தான் இறைவனை அடையமுடியுமென்பது உரையாசிரியர்கள் கூற்ருகும்.

### காலம் இடம் இல்லை

கிருஷ்ணமூர்த்தி இவ்வுரையாசிரியர்களின் கூற்றை மறுக்கிருர். சத்தியம் என்பது காலம், இடம், காரணங்களைக் கடந்ததாகும். எந்த ஒரு பாதையும் காலத்துக்கும் இடத்துக்கு உட்பட்டதாகவே இருக்கமுடியும். எனவேகாலத்தையும் இடத்தையும் கடந்து நீக்கமற எங்கும் நிறைந்த ஒரு பரம்பொருளை, அவற்றுக்கு உட்பட்ட பாதையால் எங்ஙனம் அடைதல் இயலும்? என்பது கிருஷ்ணமூர்த்தியின் விஞ. இதற்குச் சரியான விடை இந்து தர்ம சாத்திரங்களிலேயே உள்ளது. அது

[5ம் பக்கம் பார்க்க]

## கந்தபுராண மகிமையும் வலிமையும்

— பருளாய் விநாயகன் —

ஈழம் வாழ் இந்துக்களிற் பெரும்பாலானேர் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சைவமக்கள் ஈழம் வாழ்சைவர்களின் இதயங்களைக் கொள்ளை கொண்ட திருநூலாகத் திகழ்வது கச்சியப்ப சிவாசாரியார் அருளிய கந்தபுராணமாகும்.

கந்தபுராணம் சைவத்திருமுறைகளுக்கும் காலத்தாற் பிந்தியதேனும் முப்பெரும் சைவப்புராணங்களிலும் முதன்மையாகக் கொள்ளப்படுகின்றது. ஈழத்துச் சைவர்கள் சிவபெருமானின் நெற்றிக் கண் போல-அத்துணைச் சிறப்பாகக் கந்தபுராணத்தைக் கருதுகிருர்கள்.

இன்றும் கந்தபுராண படனம் நிகழும் திருக்கோயில்ள்ள் கிராமங்களில் உள. கந்தபுராணம் விபரிக்கும் கதைகளை உள்ளடக்கிய திருநாள்களை மிக்க பயபக்தியுடன் விரதமிருந்து அனுட்டிப்பதைக் காண்கின்ருேம். இவற்றுள் குறிப்பிடத்தக்கவை சிவாராத்திரியும், சூரன்போர், கார்த்திகைவிளக்கீடு முதலியவைகளாகும். கந்தஷஷ்டி, வெள்ளிக்கிழமை விரதங்களும் கந்தபுராணத்தால் வலியுறுத்தப்பட்ட விரதங்களே.

முழு முதற்கடவுள் சிவபெருமானே என்பது எல்லாச் சைவர்களின் கொள்கையாகும். எனினும் முருக வழிபாடு முதன்மைவழிபாடாகத் திகழ்கின்றது. திருமுறைகளில் முருகவழிபாடு சிறப்பிடம் பெருத நிலையில் எங்ஙனம் முருகவழிபாட்டில் சிவவழிபாட்டிற்குரிய திருமுறைகளை ஓதலாம் என்ற கேள்வி சாதாரணமாகப் பகுத்தறிவுள்ள எவரது உள்ளத்திலும் எழும் கேள்வியாகும். அன்றியும் இந்துக்களில் ஒரு சாரார் சிவன், விட்டுணு, அம்பிகை, முருகன், கணபதி, ஞாயிறு இவர்களுள் எவரை வழிபட்டாலும் ஒரே விதப் பெறுபேறே கிட்டும்; எனவே இவர்களுள் எவரையாவதுவழிபடலாம் எனப்பிரசாரமும் செய்யலாயினர். ஆனுல் ஆறு தெய்வங்களும் எல்லா வகையிலும் சமமானவை என்றுகூறும் தோத்திரங்களே, புராணவரலாருே சைவர்கள் மத்தியில் இடம் பெறவில்லை. இந்தநிலையில் பெரியதோர் சங்கடமான சமய உட்போர் ஏற்படலாயிற்று. இதனை முளையோடு கிள்ளி எறிந்து சிவம் என்னும் ஒரேபரம்பொருளின் பல்வேறு மூர்த்திகளே ஏனைய இந்துத் தெய்வங்கள் என்னும் நிலை ஏற்பட்டது. இதனை விளக்கு முகமாக வடமொழியிலும், தென்மொழியிலும் கந்தபுராணம் தோன்றியது எனலாம்.

கந்தபுராணம் என்ற பெயரைக் கேட்டதும் எவரும் கந்தனின் சிறப்பினைக் கூறுவதாகவே கொள்வாராயினும் சிவபரம் பொருளே-அசர்மத்தைப் போக்குமுகமாக ஆறுமுக முருகனுனர் என்பதை அறிந்து முருகனும், சிவனும் வேறல்ல என்ற முடிவினையே மேற்கொள்வர். இந்தப்புராணத்தை அருளிய கச்சியப்பர் திருநாளகிய இன்று கந்தபுராண உண்மைகளைச் சிந்திப்பதன் மூலம் கச்சியப்பருச்கு நம் வழிபாட்டை நிழ்த்த வேண்டும்

[இன்று மேலைத் தெல்லி சிவகுருநாதசுவாமி தேர்]

## தேரினில் ஏறி இன்றே சொல்லொணு அல்லல் தீர்ப்பாய்!

தெல்லியம் பதியின் மேற்கில்
தேசுடன் வீற்றி ருந்து
நல்லருள் பாலித் தென்றும்
நாடினேர் தம்மைக் காக்கும்
சொல்தமிழ்த் தெய்வ மான
சிவகுரு நாத ஸ்வாமீ
சொல்லொணு அல்லல் தீர்ப்பாய்!
தேரினில் ஏறி இன்றே!


— கவியரசு முருகசூரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி

### சிவகடாட்சம் பாலசிங்கம்

(சிக் அன் கைன் பாலா)



மண்ணிலே:
15-12-1938

விண்ணிலே:
19-02-1985

திதி:
10-03-1986

நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் இனிய முகம் என்றுமே எம் உள்ளத்தில் நிலைத்து விட்டதே. எப்போதும் சிரித்துக் கொண்டு மற்றவர்களையும் சிரிக்கவைப்பீர்களே. இன்று நாம் கண்ணீர் விடும் போது ஆறுதல் இல்லையே இப்போ உங்களுடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

உமது பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள், சகோதரன், சகோதரிகள், மருமக்கள், மாமா, மாமி, மைத்துனர், மைத்துனிகள்.

நா. செல்வராஜா,
14/11, செம்மணி றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம். C 834

## வயாவிளா---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பலாலி இராணுவ முகாம் விஸ்தரிப்பால் பாதிக்சப்பட்டு அங்கிருந்து வெளியேறிய 200 க்கு மேற்பட்ட குடும்பங்கள் சுந்தரபுரத்திற்த இடம்பெயர்ந்துள்ளன.

பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லமுடியாதுள்ளனர். தண்ணீர் வசதியில்லை. வீடுகட்ட வசதியில்லை. என அவர்கள் கூறுகின்றனர்.

பொது ஸ்தாபனங்களும், பொதுமக்களும் இவர்களுக்கு கைகொடுக்க வேண்டும் என்று கோரப்படுகிறது.

## முன்னாள்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்குப் பிரதேசத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் அத்துமீறல்கள் தொடர்பாகவும், அண்மையில் மலையகத்தில் நிகழ்ந்த அசம்பாவிதங்கள் குறித்தும் இலங்கையிலுள்ள இந்திய ஸ்தானிகர் திரு. டிக்ஸிற்றுடன் நேற்றுக் கலந்துரையாடினார்.

திருமதி ஜூடித் ஹார்ட், பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் தீவிரவாதப் பிரிவினைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்தது.

இவர் கலாநிதி நீலன் திருச்செல்வத்தைச் சந்தித்து இலங்கைத் தமிழரின் உண்மை நிலை பற்றி விபரமாக அறிவார்.

## தத்துவமேதை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

என்ன? அதுதான் நால்வகைப் பாதைகளையும் நிவிருத்தி மார்க்கம் என்பதாகும். அதாவது மனக்கற்பனையினால் ஏற்படுத்தப்படும் விருத்திப் பாதைகளை நீக்குதலாகும். இதிலிருந்து நாம் வழுவற விளங்குவது யாதெனின், நால்வகைப் பாதைகளும் உண்மையிலேயே நேரடிப் பாதைகள் அல்ல என்பதாகும். இவற்றை எதிர்மறைப்பாதை (Negative approch) எனக் கிருஷ்ணமூர்த்தி விளக்குகிறார்.

சூரியஒளி என்றும் உள்ளது. அதுமறைக்கப்படுவதனாலேயே இரவு (இருட்டு) ஏற்படுகிறது. மறைப்பை நீக்கினால் ஒளி சுயமாகவேபிரகாசிக்கிறது: மனவிருத்தியாகிய மறைப்பை நீக்கினால் சுயப்பிரகாசமான சிவம் தானாகவே பிரகாசிக்கிறது. இதற்காக ஓரிடத்திலிருந்து இன்னோர் இடம் செல்லும் பாதை எதுவும் தேவையில்லை. சாந்தியையும் சமாதானத்தையும் நாம் எந்த ஒரு அணுகுமுறையாலும் அடைதல் இயலாதென்பதை உணருதல் வேண்டும். மனவிருத்தி அமைதி பெறும் போதுதான் இவற்றைப் பெறுதல்முடியும். மோன தியான சாதனையே இதற்குவேண்டும். எமது இதயத்தில் என்றும் கிருஷ்ணமூர்த்தி வாழ்க!

# உளவாளிஎன்பது...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சிலுவைச் சங்கப் பிரதிநிதியிடமும், இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதரக அதிகாரியிடமும் நேற்றுப் பிற்பகல் கையளிக்கப்பட்டார்.

திருமதி வில்லிஸை பத்திரிகை நிருபர்கள் முற்றுகையிட்டு சரமாரியாகக் கேள்விகள் எழுப்பினர். அதற்கு அவர் எவ்வித பதிலும் அளிக்க மறுத்துவிட்டார், அதேசமயம் சமுகமளித்திருந்த பிரிட்டிஷ் தூதரக அதிகாரியும் பத்திரிகை நிருபர்கள் கேள்விக்கு அப்பெண் பதிலளிப்பதை மறுத்துரைத்ததுடன், கொழும்பு சென்றதும் கூட கடத்தப்பட்டது சம்பந்தமாக எதுவும் தெரிவிக்கப்பட மாட்டாது என்று உறுதியளித்தார்.

பின்னர் அம்மூவரும் விமான நிலையம் நோக்கிப் புறப்பட்டனர்.

இவர்களுக்கு 'ஈரோஸ்' அமைப்பினர் பனம்பொருளினால் தயாரிக்கப்பட்ட அலங்காரப் பொருளை அன்பளிப்புச் செய்தனர்.

திருமதி வில்லிஸ் ஒரு உண்மையான உளவாளி என்பதற்கு அவரிடமிருந்து தாம் பல தகவல்களைப் பெற்றுள்ளதாக பத்திரிகையாளர் கேட்டதற்கு ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டினர்.

சித்திரவதைகளுக்கோ, எந்த விதமான இம்சைகளுக்கோ அப்பெண்ணை உட்படுத்தாமல் உளவியல்ரீதியாக விசாரணை செய்ததாகவும், யாழ் குடாநாட்டுக்கப்பால் உள்ள ஓரிடத்தில் பிரிட்டிஷ் பண்பாட்டுக்கலாசாரவாழ்க்கைமுறைக்கேற்ப சகல சௌகரியங்களும் அளித்து அவரைப் பராமரித்ததாகவும் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் ஈரோஸ் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

''திருகோணமலையில், இராணுவத்தினர் தமிழ் அகதிகளைச் சுடவில்லை; போராளிகளே சுட்டார்கள்'', 'புளட்' இயக்கத்துக்கும் சிங்கள இளைஞர்களுக்குமிடையிலுள்ள தொடர்பு'' போன்ற பலவிதமான குறிப்புகள் அவர் வைத்திருந்த குறிப்பேட்டிலிருந்து கைப்பற்றப்பட்டதாகவும் அப்பேச்சாளர் தெரிவித்தார்.

''வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு வெளிநாடுகளிலிருந்து வரும் உல்லாசப் பிரயாணிகளையோ, பத்திரிகைகாரர்களையோ செல்வதற்கு அனுமதிக்காத பாதுகாப்பு அமைச்சு, வெளிநாட்டிலிருந்துவந்த இப்பெண்ணை ஒரு பத்திரிகையாளர் என்று வர்ணித்துஇங்கு எப்படி அனுப்பிவைத்திருக்க முடியும்?'' என்று நிருபர்களிடம் கேட்ட அப்பேச்சாளர், பாதுகாப்பு அமைச்சின் இந்த நடவடிக்கை ஒன்றே அப்பெண் ஒரு உளவாளி என்பதை ஊர்ஜிதம் செய்துள்ளது என்று சொன்னார்.

அரச பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் தங்கியிருக்கும் ஒரு அகதிகள் முகாமில்வைத்து செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியிடப் கையளிக்கவேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கத்துடனும். இதை உலகறியச் செய்யவேண்டும் என்ற பிரசார எண்ணத்துடனும் கடத்தப்பட்ட இப்பெண்ணை விடுவிப்பதற்கு இந்த அகதிகள் முகாமைத் தேர்ந்தெடுத்தோம்'' என்றும் அவர் தெரிவித்தார். [மா]

## வில்லிஸ்---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யாழ். வைத்திய அத்தியட்சகருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, பலாலி செல்வதற்கு அம்புலன்ஸ் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது.

பிற்பகல் 3-25 மணிக்கு வான் ஒன்று ஹோட்டலுக்கு வந்தது. அதிலிருந்து இறங்கிய 3 இளைஞர்கள் உள்ளே சென்று செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதியுடனும், பிரிட்டிஷ் தூதரக இரண்டாவது செயலாளருடனும் சுமார் பத்து நிமிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அசோக் ஹோட்டலுக்கு வெளியே இரு பிரதான வாசல்களிலும் இளைஞர்கள் நின்றனர்.

பிரிட்டிஷ் தூதரகச் செயலாளர் தொலைபேசியில் யாருடனோ தொடர்புகொண்டதன் பின்னர் அங்குவந்த மூன்று இளைஞர்களுடன் சரியாக 3-30 மணிக்கு செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியும், தூதரகச் செயலாளரும் புறப்பட்டனர் வானுக்குப் பின்னால் இரு வான்களில் இளைஞர்கள் நல்லூர் நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர்.

கடத்தப்பட்ட திருமதி வில்லிஸ் ஏற்கனவே கார் ஒன்றில் வந்து நல்லூரில் காத்திருந்தார். பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது. 3-45 மணிக்கு திருமதி வில்லிஸ் விடுதலை செய்யப்பட்டார்.

பிற்பகல் 4 மணிக்கு 'அம்புலன்ஸில்' யாழ். வைத்திய அத்தியட்சகர் அங்கு வந்து சேர்ந்தார். பிற்பகல் 4-15 மணிக்கு வைத்திய அத்தியட்சகருடன், விடுதலையான திருமதி வில்லிஸும், செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியும் பிரிட்டிஷ் தூதரகச் செயலாளரும் பலாலிக்குப் புறப்பட்டுச் சென்றனர். நேற்றிரவு சுமார் ஏழு மணியளவில் கொழும்பு போய்ச் சேர்ந்தனர்.

## இந்தியப் படகின்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துச் சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையினர் இராமேஸ்வரம் கரைக்கு அப்பால் இந்திய மீனவர் ஒருவரின் படகைத் தாக்கியதாகவும். பலத்த காயமடைந்த படகோட்டி ஒருவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

பின்னர் இந்தப் படகு கச்சதீவுக் கரைக்கு இலங்கைக் கடற்படைத் தளம் அமைந்துள்ள இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும், இதிலிருந்தவர்கள் தப்பிக்க முயன்றபோது இலங்கைக் கடற்படையினர் அவர்களை நோக்கிச் சுட்டதாகவும், அதனால் படகின் எஞ்சின் சேதமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

இதுதவிர, மேலும் இரு படகுகள் இலங்கைக் கடற்படைத் துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவற்றிலிருந்த வலைகளும் மீன்களும் கைப்பற்றப்பட்டு, மீனவர்களும் தாக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாக மீனவர் சங்கச் செயலாளர் பி. அருளானந்தம் இராமேஸ்வரம் மீன்வளத்துறை இயக்குநருக்குப் புகார் செய்துள்ளார். [பி]

## பதுளை---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட இராணுவத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், இராணுவத்தினர் மேற்கொண்ட எதிர்த்தாக்குதலின்போது மேற்படி இருவரில் ஒருவர் தப்பியோடியதாகவும், காயமுற்ற மற்றவர் 'சைனைட்' அருந்திஸ்தலத்திலேயே மாண்டதாகவும் தெரியவருகிறது.

## யாழ். இந்து ஆசிரியர்கள் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. பி. எஸ். குமாரசாமியின் தாயார் காலமானார். இறுதிக் கிரியைகள் இன்று நடைபெறும்.

யாழ் இந்து ஆசிரியர் சழகத்தினர் இன்று நேரில்சென்று அஞ்சலிசெலுத்துவார்கள்.

## 40 தமிழர்கள் கைது!

[கொழும்பு]

நாலாம் குறுக்குத்தெரு உட்பட கொழும்பில் தமிழர் வாழும் பல பகுதிகள் ஆயுதப் படையினரால் சோதனைக்குட்படுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

மேற்படி 'சோதனை' களின் போது ஏறத்தாழ நாற்பது தமிழர்கள் கைதுசெய்யப்பட்டார்கள் எனவும்.பலர் நையப் புடைக்கப்பட்டனர் எனவும் அறிவிக்கப்படுகின்றது [ச]

## பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்தக்கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

''பேராதனைப் பல்கலைக் கழகம் நடத்தும் வெளிவாரிப் பட்டப் பரீட்சைகளை யாழ். பல்கலைக்கழகத்தில் எழுதுவதற்கு ஆவனசெய்ய வேண்டும்'' எனக்கோரும் மகஜரொன்றை பட்டப்படிப்புகள் கல்லூரித் தமிழ் மாணவர் மன்றத்தின் பிரதிநிதிகள் யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனை நேற்று முன்தினம் சந்தித்து கையளித்தனர். இம்மகஜரில் இக்கோரிக்கையை வலியுறுத்தி இருநூறுபேர் கையொப்பமிட்டனர். [நா]

## கடத்தலில் சம்பந்தமில்லை

[யாழ்ப்பாணம்]

''எமது ஸ்தாபனத்தின் பெயரைக்கூறி 81 ஸ்ரீ 5466 இலக்கமுடைய 'ஹொண்டா' மோட்டார் சைக்கிளை கடத்திச் சென்றவர்கள், உரிய இடத்தில் சைக்கிளை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் தவறின் எமது ஸ்தாபனம் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டி ஏற்படும்'' என்று தமிழீழ விடுதலை இராணுவம் மோட்டார் சைக்கிள் ஒன்று கடத்தப்பட்டது சம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

''குறிப்பிட்ட மோட்டார் சைக்கிளை 'ரெலா' ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் கடத்திச்சென்றதாக தினசரி ஒன்றில் தவறான புகார் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இச்சம்பவத்திற்கும் எமக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதை அறியத் தருகின்றோம். எமது ஸ்தாபனத்திற்குக் களங்கத்தை ஏற்படுத்தும் நோக்கமே யாகும்'' என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

## இலங்கையில்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. பெர்னாட் திலகரத்னவும் இலங்கை இனப்பிரச்னை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அதிகாரப்பகிர்ந்தளிப்புக் குறித்த இலங்கையின் நிலையை இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்திக்கு திரு. பேர்னாட் திலகரத்ன விளக்கினார். [பி]

## நேரடிமோதல்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

வழமைபோல் இளநீர் பிடுங்கிக் குடிப்பதற்கு நடந்துவந்த இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையே இம்மோதல் இடம்பெற்றதாம். இச்சம்பவத்தின் பின்னர் ஹெலிகொப்டர் ஒன்று பறந்து அவ்விடத்திற்கு வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், பொதுமக்கள் பீதியடைந்து தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச்சென்றுள்ளதாகவும் தெரிகிறது. [ச]


லிடோ சினிமா
10-30, 2-30, 4-45 6-30
James Bond 007
in
Octo Pussy
(Cinemascope Colour)
[Sexy Action and Thrills]

வெலிங்டன்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதா-சுரேஸ் நடித்த
ஆனந்த ராகம்
(கலர்)

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30,
சுரேஷ்-விஜி
இரண்டு மனம்

வெளிவந்துவிட்டது!
கணிதப்பயிற்சி ஆண்டு 9
பகுதி I (முதலிரண்டு தவணைகளுக்குரியது)
ஆசிரியர்கள்:
க. சிதம்பரப்பிள்ளை B. A (Hons); Dip.in.Ed.
வே. நடேசபிள்ளை B. Sc.; Dip. in Ed.
விளக்கம், உதாரணங்கள், தரப்படுத்தப்பட்ட பயிற்சிகள், மாதிரி வினாத்தாள், விடைகள் உள்ளடங்கியது.
விலை ரூபா 9-50
சகல புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்.
கணித சேவை வெளியீடு.
(C 848)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லொறிச்சாரதி, கிளீனர் கைது! பொருள்கள் பறிமுதல்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற லொறி ஒன்று, கொழும்புக்கண்மயில்வைத்து பொலிசாரால் நிறுத்தப்பட்டு சோதனை செய்யப்பட்டதாகவும், அந்த லொறியில் சுருட்டுப்பார்சல்கள் என்ற பெயரில் 'கொண்டு செல்லப்பட முடியாத' சில பொருட்கள் இருந்ததாகவும், இதன் காரணமாக பொலிஸார் லொறிச் சாரதியையும் கிளீனரையும் கைது செய்து லொறியில் இருந்த பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளதாகவும் தெரிகிறது.

இந்த லொறி நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பெரிய கடையிலிருந்து பொருட்களை கொழும்புக்கு ஏற்றிச் சென்றது. [ஐ]

## வெளிவாரி பட்டதாரி மாணவர் ஆட்சேபம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உள்ள வெளிவாரிப் பட்டதாரி மாணவர்கள் தமது பரீட்சையை யாழ்ப்பாணத்தில் இவ்வருடம் முதல் நடத்த வேண்டும் என்றுகோரிக் கல்வி அமைச்சின் செயலாளருக்கு மகஜர் அனுப்பமுடிவு செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கல்வி நிலைய மாணவர்களால் இதற்குரிய மகஜர் தயாரிக்கப்பட்டு மேற்படி பட்டதாரி மாணவர்களிடம் கையொப்பங்கள் வாங்கப்படுகின்றன. [ஐ]

# 'ஷெல்' தாக்குதல்: இளைஞர் பலி!

[யாழ்ப்பாணம்]

இயக்கச்சியில் நேற்று முன்தினம் விழுந்த 'ஷெல்' குண்டுக்குப் பலியான இளைஞருக்கு அனுதாபம் தெரிவிக்கும்வகையில் கல்வியங்காடு, இருபாலை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் உள்ள கடைகள் யாவும் நேற்று மூடப்பட்டிருந்தன.

'ஷெல்' தாக்குதலுக்குப் பலியான இளைஞர் இருபாலை வாசியாவா. இவரின் இடுப்புக்கு மேற்பட்ட உடம்புப் பகுதி 'ஷெல்' தாக்குதலால் சிதறுண்டுபோயிருந்தது.

ஆனையிறவு இராணுவத்தினரின் 'ஷெல்' தாக்குதலுக்கே இவர் பலியானராம். [ஐ]

## அபகரிக்கப்பட்ட தபால்கள் மீளவும் கிடைத்தன

[புலோலி]

பருத்தித்துறை தபால் நிலையத்திலிருந்து பருத்தித்துறை இராணுவ முகாமிற்கு தபால் பியோனால் கொண்டு செல்லப்பட்ட தபால்கள் இனந்தெரியாத இளைஞர்களினால் அபகரித்துச் செல்லப்பட்டன. இது சம்பந்தமாக பருத்தித்துறை தபால் அதிபரினால் யாழ். மாவட்ட தபால் அத்தியட்சகருக்குப் புகார்செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளதாவது:

பருத்தித்துறை இராணுவ முகாமிற்கு வரும் தபால்கள் யாவும் ஒவ்வொரு நாளும் தபால் பியோன் மூலம் பருத்தித்துறை தபால் நிலையத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு இராணுவமுகாமிற்கு வழங்கப்படுவது வழக்கம். அதேபோல் சம்பவதினமும் இராணுவமுகாமிற்கான தபால்களுடன் தபால் பியோன் பருத்தித்துறை நகருக்குச் சென்றபோது நகர்சந்தியில் தோன்றிய இனந்தெரியாத இளைஞர் கோஷ்டியொன்று தபால்களை அபகரித்துச் சென்றது. இதனைத் தொடர்ந்து தபால் பியோனின், முறைப்பாட்டையடுத்து இச்சம்பவம் பற்றி பருத்தித்துறை தபாலதிபர் யாழ் மாவட்டத்தபால் அத்தியட்சருக்குப் புகார் செய்தார்.

ஆனால் இப்புகார் செய்யப்பட்ட மறுநாள் இனந்தெரியாத இளைஞர்களினால் அபகரித்துச் செல்லப்பட்ட தபால்கள் யாவும் தபால்பெட்டிக்குள்ளிருந்து மீட்கப்பட்டு விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்து சமய விருத்திச் சங்கம்

(சுண்டுக்குளி)

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் திரு. சி. விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெற்றது. புது வருட உத்தியோகத்தர்களாக சென்ற ஆண்டு பதவியில் இருந்தவர்களே மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: சி. விஸ்வலிங்கம்
செயலாளர்: சு. நடனபாதம்
உப செயலாளர்: க. கதிரேசு
தனாதிகாரி: இ. சரவணபவன்
இத்துடன் 15 பேரடங்கிய நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்

# "அதிகரிக்கும் வானத்தாக்குதல்: உயிர் காக்கும் படை அவசியம்"

(யாழ்ப்பாணம்)

'தரைத்தாக்குதல் குறைந்து வானத்தாக்குதல் அதிகரித்து வரும் இந்நாட்களில், உயிர் காக்கும் படைதான் அவசியமாகும்''

யாழ். சிவன் கோவிலடியிலுள்ள அண்ணா தி. மு க. நகர செயலகத்தில் நடந்த வெகுசனப் போராட்ட கூட்டுக்குழுக் கூட்டத்தில் தேசிய முன்னாள் யாழ் உதவி மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. பொன். மதிமுகராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசியதாவது: ''முன்பெல்லாம் நடந்து வந்து கடைகள், கட்டிடங்கள், காரியாலயங்களுக்குத் தீமூட்டினார்கள், அந்நேரத்தில் தீயணைக்கும்படை அவசியமாகத் தோன்றியது. இன்று நிலைமை மாறிவிட்டது. இன்று மனித உயிரையே பலி எடுக்கிறார்கள்; தமிழன் என்றால் தீர்த்துக்கட்டுகிறார்கள். நமது உயிரைப் பாதுகாக்கவேண்டிய நிலைஏற்பட்டுவிட்டது. தரைத்தாக்குதல் குறைந்து வானத்தாக்குதல் நடக்கிறது. கட்டடங்கள் குண்டுபோட்டு தகர்க்கப்படுகின்றன; உயிர்கள்பறிக்கப்பட்டுகின்றன. இன்று உயிர் காக்கும் படைதான் அவசியமாகும்.

''நாங்கள் அன்று முதல் அஹிம்சை வழியில்தான் போராடிவருகின்றோம். அறப் போராட்டங்கள் மூலம். அரசுக்கு மக்களின் எதிர்ப்பைக் காட்டவேண்டும். கடல்நீர் கழுத்தளவு வந்த பின்னரும் நாம் பேசாமல் இருக்கமுடியுமா? ஒவ்வொருவரும் தங்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை உணர்ந்து. இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்குகொள்ள வேண்டும்''

தேவர்குலம் நலன்புரிச் சங்கத்தைச் சேர்ந்த திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி பேசுகையில் கூறியதாவது: ''யாழ்ப்பாணத்தில் 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்தில், நீதிமன்றமும், ஆஸ்பத்திரியும், டென்சன் கொடுப்பனவு நிலையமும், வர்த்தக நிலையங்களும், இருக்கின்றன சட்டத்தரணிகள், டாக்டர்கள், வர்த்தகர்கள், இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துகொள்ளவேண்டும் என்று கூட்டுக்குழு சார்பில் கேட்டுக்கொள்கிறேன்''

சங்கிலியன் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் சசிதரன் பேசுகையில்; புதிய முறையில், எங்கள் எதிர்ப்பை அரசுக்கு தெரிவிக்கவேண்டுமென்றார்.

பொன் மதிமுகராசா பேசுகையில் கூறியதாவது, 'இதுவரை 22 அமைப்புக்கள் ஊர்வலத்தில் பங்குபற்ற முன்வந்துள்ளன. மாணவர் அமைப்புக்களுடனும் தொடர்பு கொள்ளவிருக்கின்றோம். மாணவர்கள் அன்றைய தினம், கல்லூரிகளுக்கு வழக்கம் போல வந்துவகுப்புக்களை பகிஷ்கரித்துவிட்டு ஊர்வலத்தில் பங்குகொள்ள வேண்டும் யாழ். நகரில், 1000மீற்றர் பாதுகாப்பு வலயத்திற்குள் சில கல்லூரிகள் உள்ளன. ஆதலால், மாணவர்கள் அமைப்புகள் இதனை உணர்ந்து ஊர்வலத்தில் பங்குமற்றுமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன். புதிய கடல் வலய திட்டத்தினால், பெருந்தொகையான கடற்றொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களும் இந்த ஊர்வலத்தில் பங்குபெற வேண்டும்.

''ஏழு முஸ்லிம்அமைப்புகளுடன் தொடர்பு கொண்டுள்ளேன் அவர்களும் பூரண ஒத்துழைப்பு தருவதாகத் தெரிவித்துள்ளனர். அரசாங்க தனியார் துறைஊளியர்களும் இந்த ஊர்வலத்தில் பங்கு பற்றி தங்கள் எதிர்ப்பை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்',.

வெகுசனப் போராட்டக் குழுவின் கூட்டம்' இன்று மாலை நடைபெற விருக்கிறது. (க)

# இப்படியும் நடக்கிறது

'விசிட்சிங் கார்ட்' எனப்படும் அறிமுக அட்டை உங்களிடம் இருக்கிறதா?

முன்னர் எல்லாம்; பல துறைகளையும் சேர்ந்த முக்கியமானவர்கள் மட்டும்தான் இந்த 'விசிட்டிங் கார்ட்' வைத்திருப்பார்கள். ஆனால் இப்பொழுது பலரிடமும் பரவலாகக் காணப்படுகிறது.

இதில் ஒரே ஒரு ஒற்றுமை; தங்களது அறிமுக அட்டையை எல்லோரும் ஆங்கிலத்தில்தான் அச்சுப்பதிவு செய்வார்கள்.

இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம். தூதரகத்தில் இரண்டாவது செயலாளராகக் கடமையாற்றுபவர் திரு. மக்டெமொட். அவரின் வசமுள்ள 'விசிட்டிங் கார்ட்' டில் [அறிமுக அட்டையில்]—

அலஸ்டெயர் ரி மக்டெமொட், இரண்டாவது செயலாளர், பிரித்தானிய தூதராலயம்,

இந்த வார்த்தைகள், எழுத்துப்பிழை ஒன்றுகூட இல்லாமல் முழுக்க முழுக்க தமிழில் இருக்கிறது.

ஒரு ராஜதந்திரியின் 'விசிட்டிங்கார்ட்' தமிழில் இருப்பதை நான் முன்னர் கண்டதே இல்லை! நீங்கள்...?

-ஊர்குருவி

# இன்றைய பலன்

மாதம்- மாசி
திகதி- 7 (1986-2-19]
கிழமை- புதன்
திதி- தசமி மு. இரவு வரை
நட்சத்திரம்- மிருகசீரிடம் மு. இ வரை

மேடம்; புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். புதிய அனுபவங்கள் கிடைக்கும். குறிக்கோளிலும் வெற்றியுண்டு,

இடபம்: வாழ்க்கையில் தென்றல் வீசும். கணவன் மனைவி உறவு அன்புகொண்டதாக இருக்கும். மற்றவர்களின் கவனத்தைத் திருப்புவதில் வெற்றியடைவீர்கள்.

மிதுனம்: எதிலும் மந்தநிலை தென்படும். கடன் தொல்லை அதிகரிக்கலாம். தனி வழியில் நாட்டம் செலுத்துவீர்கள்.

கடகம்: புனைந்துரைகளால் மனது புண்படும். அதிகாரப் போதையில் தவறுகள் நடக்கும். இன்று அமைதியே நன்று.

சிங்கம்: ஆராய்ச்சியாளர்களுக்குப் பொன்னான தினம். அறிவுத்தாகம் மேலிடும். இனபந்துக்கள் கொண்டாட்டமும் உண்டு.

கன்னி: உண்மை இன்று ஊமையாகிவிடும். உதவி செய்யப்போய் உபத்திரவத்தை விலைக்கிவாங்கிக் கொள்வீர்கள். செலவிற்கும்இடமுண்டு.

துலாம்: படித்தவர்கள்மூலம் பயனடைவீர்கள். தொழில் புரியுமிடத்தில் செல்வாக்குப் பெருகும். வாகனச் சுகமும் உண்டு

விருச்சிகம்; நல்ல காரியங்களை ஆரம்பிப்பதற்கு இன்று சுபதினம். மக்களால் மகிழ்ச்சியும் குடும்பத்தில் சுமுகமான நிலையுமுண்டு.

தனுசு: அரசின் ஆத்திரப் பார்வை உங்கள் பக்கம் திரும்பும். முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு எதிரிகள் முனைவர். அமைதியே நன்று.

மகரம்: களஸ்திர வழியால் நன்மைகள் கிடைக்கும், குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கிடமுண்டு நண்பர் ஒருவரின் வரவுக்கும் இடமுண்டு.

கும்பம்; வணிகர்கள் வாழ்வில் சோதனை நிறைந்ததாக இருக்கும் சிறியதலையிடிக்கும் இடமுண்டு. நிதானத்துடன் நடந்துகொள்ளவும்.

மீனம்: நீண்டநாள் எதிரிகள் நண்பராவார்கள் பொதுப் பணிமூலம் புகழுக்கும் இடமுண்டு திருப்தியான தினம்.

திருமலை
வே. ரவீந்திரன்

## தவக்காலச் சிந்தனை



8ம் நாள்

கானமயில் ஆட சிறகடித் வான் குயில் போல் காலமெல்லாம் வீண்பெருமை பேசியே தேய்கின்றேன். ஞாலமதில் சோதனைகள்வேதனைகள் தொடர்ந்ததுமே வாலறுந்த நாய் போல நோய்கொண்டு குரைக்கின்றேன்.

துயர்தீர்க்கும் அருமருந்தாய் நீயிருக்க நானோ அயர்ந்தே தூங்கிவிட்டேன். நின் நினைவை மறந்துவிட்டு என்னருகே நீயிருந்து உன் உருவைக் காட்டுகின்றாய் என்மனம்மா உருவிழந்து இருளருகே விரைகின்றது

பாவியேன் நான் பரகதியை நாடிடவே ஆவியினை அருளிடுவாய் அன்பனே, ஆண்டவனே தூயதோர் உள்ளத்தைத் தந்திடுவாய், திருமகனே தீய வாழ்வின் கொடுமைதனை குறைத்திடுவாய். உன் நினைவில் நான் வாழ உண்மைதனை நான்பேச என்னருகே நீ இருக்க உன் நாமம் தொழுகின்றேன். கண்ணை [illegible]மை காப்பதுபோல் [illegible]சனையைக் காட்டு[illegible]. கனிவுடனே நான்வாழ கருணை மழை பொழியுமையா!

வின்சென்ற் பற்றிக்
அ. ம. தி

## வேலாயுதசுவாமி கும்பாபிஷேகம்

(கோப்பாய்)

வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் மார்ச் மாதம்பதினேழாம் திகதி நடைபெறுகிறது.

இதுசம்பந்தமாக ஆலய திருப்பணிச்சபைச் செயலாளர் விடுத்துள்ள கோரிக்கையில், மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற ஐம்பதினாயிரம் ரூபா தேவைப்படுகிறதென்றும் பக்தர்கள் இயன்றளவு நிதி உதவி அளித்தும் கோயிற் பிரகாரங்களில் செய்யப்படவேண்டிய பணிகளைச் சிரமதான மூலம் உதவுமாறும் வேண்டியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுதரவாக காணப்பட்ட சைக்கிள்

(யாழ்ப்பாணம்)

சுன்னுகம் மீன் சந்தைக்கு அண்மையில் அனுதரவாகக் காணப்பட்ட சைக்கிள் மயிலங்காடு கிழக்கு ஞானகலா சனசமூக நிலையத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுளளது.

உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டி சைக்கிளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று மேற்படி சனசமூக நிலையத்தினர் தெரிவிக்கின்றனர். (ஐ)

## பிரயாணிகள் கஷ்டம்

(புலோலி)

வடமராட்சிப் பகுதியிலிருந்து புகையிரதப்பிரயாணம் செய்யச் செல்லும் பிரயாணிகள் பெரும்பாதிப்படைந்து வருவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

புகையிரதப் பிரயாணத்திற்கான புகையிரத ரிக்கற்களைப் பெற்றுக்கொள்வதற்கு தபால் கந்தோர்களில் ''மணி ஓடர்களை''ச் சரியான தொகைக்குப் பெற்றுக்கொள்ள முடியாமலே இப்பிரயாணிகள் பாதிப்படைந்து வருகின்றனர்,

புகையிரத நிலையங்களில் ரிக்கெற்களைப் பெற்றுக்கொள்வதற்கு தபால்கந்தோரிகளில் மணியோடர்களை எடுத்துவர வேண்டுமெனப் பணிக்கப்பட்டதைத்தொடர்ந்து தாம்மேற்கொள்ளவேண்டிய இடங்களுக்கு ரிக்கெற்றுக்கான பணத்தொகை தெரியாத பிரயாணிகள் தபால் கந்தோர்களுக்குச் சென்று கஷ்டமனுபவிக்கின்றனர்.

## யாழ். நகரில் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

வீட்டுச்சொந்தக்காரர் நித்திரையில் ஆழ்ந்து கிடந்த நேரம் அலுமாரி திறக்கப்பட்டு நாற்பதாயிரம் ரூபா பணம் ஐம்பது பவுண் நகை, காணி உறுதி, அடையாள அட்டை, புடவைகள் அடங்கிய மூன்று பெட்டிகள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் சிவன் கோவில் வடக்குவீதியில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

நள்ளிரவு வெளியே சென்றுவிட்டு, அறைக்கதவைப் பூட்டாமல் படுத்துக்கொண்டதாகவும், விடியற்காலை எழுந்து பார்த்தபோது அலுமாரிதிறக்கப்பட்டு இருந்ததாகவும் அதில் இருந்த மூன்று பெட்டிகளைக்காணவில்லை என்றும் வீட்டுக்காரர் தெரிவித்துள்ளார். [ஐ]

## இலங்கை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டும். இதனுல் இலங்கையின் சுதந்திரத்திற்கு ஆபத்து ஏற்படலாம்.

''தமிழர்விடுதலைக்கூட்டணி இனப்பிரச்னை தீர்வுக்கு தெரிவித்த ஆலோசனை சிறந்த அம்சமாகும். (ய)

## 'சாலஞ்சர்'....

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

சக் காரணமாகயிருக்கலாம். இவ்விபத்துப்பற்றி ஆராய்ந்த 'நாஸா, ஸ்தாபன உயரதிகாரிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

கடந்தமாதம் 28 ம்திகதி புறப்பட்டு 72 விஞடிகளில் 'சலஞ்சர், ஓடம் வெடித்து அதிலிருந்த ஒரு ஆசிரியை உட்பட ஏழு விண்வெளிவீரர்களும் மரணமானது தெரிந்ததே!

இதுபற்றி ஆராய்ந்த அதிகாரிகள் மேலும் தெரிவிக்கையில்; சிதைவுற்ற நிலையில் பலமனித உறுப்புக்கள் புளோரிடா் கடலில் கண்டெடுக்கட்பட்டுள்ளதாகவும் இவை சாலஞ்சரிடமாண்டுபோன ஏழு பிரயாணிகளுடையதாக இருக்கலாம் எனவும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (கி)

சட்டவிரோத மின்பாவனை:

# பொருள் பறிமுதலுடன் குற்றப்பணமும் அறவிடப்படும்

(புலோலி)

''சட்டவிரோத மின்பாவனையாளர்களின் மின்சாரப் பொருட்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் 2000 ரூபா குற்றப்பணமாக அறவிட வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டுள்ளது. எனவே சட்டவிரோத மின்பாவனையாளர்கள் சட்டவிரோத மின்பாவனையை நிறுத்தி ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.''

இவ்வாறு யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை நெல்லியடி உப-அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. கே. சண்முகதாஸ் சட்ட விரோத மின்பாவனையாளர்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

''சட்டவிரோதமின்பாவனை அதிகரிப்பால் பல விபத்துக்கள் ஏற்பட்டு பல உயிர்கள் அநியாயமகப் பலியாகின்றன. பல மின்மாற்றிகள் வெடித்து எரிந்துள்ளன. உப-மின் நிலையங்கள் மின்சுமையினுல் எரிந்து விடுகின்றன. இந்நிலை தொடருமானுல் பல தொழில் வர்த்தக நிறுவனங்கள் மூடப்படவேண்டியேற்படும். முக்கியமான அரிசிஆலைகள் கூட இயங்க முடியாமல் போகும் விவசாயிகள், மாணவர்கள் பெரும் பாதிப்படைவர்'' என அவர் தெரிவித்துள்ளார்.

# தொழில்நுட்ப அதிகாரியின் மறைவு சிறு விவசாயிகளுக்கு பேரிழப்பாகும்

(வவனியா)

''வவனியா - மன்னுர் பகுதிக்கு கமத்தொழில் சேவை இலாகாவின்சிரேஷ்டதொழில் நுட்ப அதிகாரியாக கடமையாற்றி அகாலமரணமடைந்த பிறேமானந்தாவின் மறைவு அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்ட இழப்பு மட்டுமன்றி வவனியா மாவட்ட சிறு விவசாயிகளுக்கு ஏற்பட்ட பெரும் இழப்புமாகும்''

வவனியா தெற்கு தமிழ் பிரிவு பிரதேச சபைக்கூட்டத்தில் அனுதாப தீர்மானத்தினை சமர்ப்பித்து பேசுகையில் பிரதேச சபைத்தலைவர் திரு என். சேனுதிராஜா மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் தமது உரையில்: திரு பிறேமானந்தா தன்னுடைய குடும்பநலனை விட வவனியா மாவட்ட விவசாயிகளுடைய விடயத்தில் கூடிய அக்கறை செலுத்தியவர் என்றுர்.

இவ்வருடம் 15 புதிய குளங்கள் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ள இந்நேரத்தில் இவரது மறைவு ஈடு செய்ய முடியாத ஒரு இழப்பாகும் என அவர் மேலும் கூறினுர்.

உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்ற முதலாவது கூட்டத்திலேயே அனுதாப தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இன்னும் பலர் உரையாற்றினுர்கள்.

## மருத்துவப் பரீட்சையில் திறமைச்சித்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியில். கடமையாற்றிய வைத்திய கலாநிதி ஆர். புஷ்பநாதன் எவ் ஆர் சி. எஸ் மருத்துவபரீட்சையில் (லண்டன்) சித்தியடைந்துள்ளார். ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திரு ராஜதுரை தம்பதிகளின் மகனுன இவர் சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரி பழைய மாணவராவார். (மா)

## பெற்ருேர் சங்க புதிய நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

லங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் யாழ். கிளையின் பெற்ருேர் சங்கக் கூட்டம், யாழ்ப்பாணம் சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரியில் நடைபெற்றபோது நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: டாக்டர் கே. சண்முகாநந்தன், துணைத் தலைவர்: திரு வி. சுப்பிரமணியம், செயலாளர்: திரு மு. ஆறுமுகம், துணைச்செயலாளர்: திரு ஏ. ஸ்ரீஸ்கந்தராசா, பொருளாளர்: திரு. ச. சந்தியாப்பிள்ளை, துணைப் பொருளாளர்: திரு எஸ். வி. சதாசிவம், நிர்வாக உறுப்பினர்கள்: டாக்டர் திருமதி வடிவாம்பிகை கைலாசபிள்ளை, டாக்டர் [illegible] குலசேகரம், திரு இ. இராஜ கோபால், திருமதி இலக்குமி பதஞ்சலி, திரு. வ, செல்லையா. (ஐ)

## பரு. நகரசபை அலுவலகம் இடமாற்றம்

[புலோலி]

பருத்தித்துறை நகரசபை அலுவலகம் பருத்தித்துறை பஸ்நிலையத்தில் உள்ள பொன்னுச்சாமி கோட்ட கட்டிடத்திற்கு இடமாறியுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5ம் திகதி பருத்தித்துறையில் நடைபெற்ற தீடீர் தாக்குதல்களையடுத்து பருத்தித்துறை நகரசபை ஊழியர்கள் அச்சத்தின் காரணமாக அலுவலகத்திற்குச் செல்லாமையினுல் அலுவலகம் மூடப்பட்டேயிருந்தது. அதனுல் பருத்தித்துறை நகர் பெரும் பாதிப்புக் குள்ளாகியிருந்தது. இதனைத்தொடர்ந்து கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பிரஜைகள் குழுக் கூட்டத்தில் நகரசபை அலுவலகத்தை இயங்கச் செய்வது பற்றி ஆராயப்பட்டது. இக்கூட்டத்திற்கு பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் திரு. எஸ். பத்மநாதனும் சில ஊழியர்களும் சமூகமளித்திருந்தனர்,

பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தை பஸ் நிலையப் பகுதிக்கு மாற்றுவது பற்றி ஆராயப்பட்டது இதனையடுத்தே நகரசபை அலுவலகம் பொன்னுச்சாமி கோட்ட கட்டிடத்தில் இயங்குமென அறிவிக்கப்பட்டது நகரசபை அலுவலகம் மூடப்பட்டிருந்த போதும் மின்சாரப்பகுதி ஊழியர்கள் மக்களின் நன்மை கருதி தமது கடமைகளை மேற்கொண்டது மகிழ்ச்சிக்குரியது என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

# "ஆசிரியர்கள் திட்டமிட்டுக் கல்வி புகட்ட வேண்டும்"

### கல்விப்பணிப்பாளர் வலியுறுத்து

(வவனியா)

''ஆசிரியர் சேவை உன்னத சேவையாகும் இந்த அடிப்படையில் ஆசிரியர்கள் பாடங்களைத்திட்டமிட்டு மாணவர்களுக்குகல்வி புகட்டவேண்டும்''

இவ்வாறு சைவப்பிரகாச வித்தியாசாலையில் புதிதாகக் கட்டப்பட்ட நூல் நிலையத் திறப்பு விழாவில் வவனியா பிரதேசகல்விப் பணிப்பாளர் திரு வி. சபாநாயகம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

பாடசாலை அதிபர் திரு க. தர்மதேவன் தலைமையில் இவ் விழா நடைபெற்றது.

கல்விப் பணிப்பாளர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது;

''ஒரு பாடசாலையின் சட்டிட கோபுரத்தினைக் கொண்டு அப்பாடசாலையின் கல்வித்தரத்தினை மதிப்பிடமுடியாது. சேவைதான் ஒரு ஆசிரியனை மதிக்கச் செய்கிறது. ஆனபடியால் ஒன்றிணைந்த கல்வித்திட்டம் தற்போது அமுலில் உள்ளபடியால் ஆசிரியர்கள் எப்போதும் மாணவர்களுக்கு இலகுவான முறையில் காலத்தற்குக்காலம் ஏற்படும் மாறுதலுக்கு ஏற்ப கல்வி கற்கும் முறையினை மாற்றி மைத்துக் கொள்ள வேண்டும்''

திட்டப்பணிப்பாளர் திரு.ரீ இலங்காநேசன் தனதுரையில்:

''கல்வி கற்றுக்கொடுப்பதையே தொழிலாகக்கொண்ட மனிதன் அதனை சேவையாக செய்யவேண்டும்'' என்றுர்.

வைபவத்தில் பிரதித் திட்டப்பணிப்பாளர் திரு,ஆ.செந்தில்வடிவேலும் பேசினுர். பெற்ருேர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் திரு ந. செல்லையா நன்றிஉரை கூறினுர்.

ஆரம்பத்தில் பாடசாலை ஆசிரியை திருமதி வரதராஜா வரவேற்புரை நிகழ்த்தினுர்.

கனகாம்பிகைக்குளம்

# வித்தியாலய வளர்ச்சியில் அதிபர் மகிழ்ச்சி

(கிளிநொச்சி)

''பெற்ருேர், மாணவர்,ஆசிரியர்களது அயராத முயற்சியினுல் கனகாம்பிகைகுளம் வித்தியாலயம் முன்னேறி வருவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. மிகவும் பின்தங்கிய பகுதியில் வசதிகளற்ற சூழ்நிலையில் இவ்வித்தியாலயம் அமைந்துள்ளபோதும் இல்வித்தியாலய வளர்ச்சியில் இப்பகுதி மக்கள் காட்டும் அக்கறை பெருமிதத்திற்குரியது''

இவ்வாறு கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் வித்தியாலயப் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் பிரஸ்தாப வித்தியாசாலை அதிபரும் கிளிநொச்சி கொத்தணிப் பாடசாலைகள் அமைப்பின் செயலாளருமான திரு பொன். தில்லைநாயகம் குறிப்பிட்டார்.

அதிபர் பொன். தில்லைநாயகம் மேலும் பேசுகையில், ''இக்கல்லூரியின் தரத்தை உயர்த்த எமது மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூர் பெரும் அக்கறையுடன் ஆதரவுகள் நல்கி வருகிருர். இவரது பெரு முயற்சியாலும் பாடசாலை அபிவிருதிச் சங்க ஒத்தாசையாலும் 11-ம் ஆண்டு வரை மாணவர்கள் கல்வி பயில வசதி செய்யப்பட்டுள்ளது.

''அத்துடன் மூன்று பட்டதாரி ஆசிரியர்கள் உட்பட்ட பதினேழு ஆசிரியர்கள் கல்வி கற்பிக்க நியமிக்கப்பட்டுள்ளனர்'' என்ருர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு சி. நடராசாவும் உரையாற்றினுர்.

பாடசாலைஅபிவிருத்திச்சங்க புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: பொன். தில்லைநாயகம், உபதலைவர்கள்: திருமதி கி. ஜே. தில்லைநாயகம், ஜனுப் பாஷா முகதீன் பிச்சை, செயலாளர்: சி. நடராசா, உபசெயலாளர்: திருமதி இ. இராஜேந்திரம், பொருளாளர்: ஆ, உருத்திரலிங்கம் 9 பேர் நிர்வாக சபைக்கும் தெரிவானுர்கள்.

## நிர்வாகிகள்

[புலோலி]

அரசாங்க சுகாதாரச் சேவை தொழிற்சங்க பருத்தித்துறை கிளைச் சங்கத்தின் பொதுக் கூட்டம் சங்க வடமராட்சி பிரதிநிதி திரு. நாகமுத்தவின் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் அரசாங்கசுகாதாரசேவை தொழிற்சங்க வடபிராந்தியக் கிளைத் தலைவர் மு சங்கரனும் கலந்து கொண்டார் நடப்புவருட நிர்வாகிகள் தெரிவில் பினவருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் கே பரமதாஸ் உபதலைவர் திருமதி ந இராசரட்ணம், செயலாளர் ஆ இளங்கோ.பொருளாளர் எம். எசேக்கியேல்செயற்குழு உறுப்புனர்கள் எஸ். சூரியகாந்தன், வீ சின்னராஜா. வி.கணபதி, கே.பாலசுப்பிரமணியம், என். தவராஜா, வி, நரசிம்மன், கே. தங்கராஜா.

## இளைஞர்கோஷ்டி நடவடிக்கை

(உடுவில்)

உடுவில் கிராமத்தில் உள்ள மல்வம் என்றபகுதியில் சட்டவிரோதமாகமின்சாரம்பெற்று வந்தவர்களுக்கெதிராக இளைஞர் கோஷ்டியொன்று நடவடிக்கையெடுத்துள்ளது.

இவ்விளைஞர் கோஷ்டியினர் சட்டவிரோதமாக மினசாரம் பெற்றுவந்தவர்களின் இடங்களுக்கு சென்று மின்சார வயர்களை அறுத்துச் சென்றதுடன் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்களுக்கு எச்சரிக்கையும் விடுத்துச் சென்றனர்.

## வித்தியாலயத்தில் பரமஹம்சர் ஜயந்திவிழா

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ இராமகிஷ்ண பரமஹம்ஸரின் ஜயந்தி விழா இன்று வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திற் கொண்டாடப்படுகின்றது அதிபர் திரு. சி சிவசரவணபவன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பரமஹம்ஸரின் போதனைகளையும் சாதனைகளையும் பற்றிப் புலவர் ஈழத்துச் சிவானந்தன் சிறப்புச்சொற்பொழிவு நிகழ்த்துவார். மாணவ, மாணவியரின்பேச்சு. நடனம், பஜனைமுதலிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும் இவ் வித்தியால்ய இந்து மாணவர் மன்றம் இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## பாகிஸ்தான் கோஷ்டி

[கொழும்பு]

பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டி ஆறுவாரகாலம் இங்கு இலங்கை கிரிக்கெட் கோஷ்டியுடன் ஆட்டங்களில் பங்குபற்றவென நேற்று கொழும்பு வந்து சேர்ந்தது.

குருணகலை வெலகெதரவிலுள்ள விளையாட்டரங்கில் பாகிஸ்தான்-இலங்கை கோஷ்டிகளுக்கிடையிலான மூன்றுநாள் ஆட்டம் இன்று ஆரம்பிக்கவுள்ளது.

# பஸ்பிரயாணிகளுக்கு ஏற்பட்ட

## பன்னிரண்டு மணிநேரப் பயங்கரம்

[கே வி.கே. திருலோகமூர்த்தி]

குறிஞ்சாத்திவு சம்பவத்தின் போது பிரயாணிகளுடன் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்ட இ.போ.ச. பஸ் பல சோதனைகளையும் மரண பயத்தையும் கடந்து, 12 மணிநேர பகீரதப் பிரயத்தனத்தின்பின்னர் யாழ்ப்பாணம் திரும்பியது.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பஸ்ஸில் சென்ற ஆண்கள், பெண்கள், குழந்தைகள் முதலானோர் ஆனையிறவு இராணுவ முகாமிலும் குறிஞ்சாத்தீவுப் பகுதியிலும் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தனர்.

பசி பட்டினியுடன் பலமணிநேரம் உயிருக்காகப் போராடினார்கள் என்று கூறப்படுகிறது.

சாரதி அம்பிகைபாகனின் சாதுரியத்தால் பிரயாணிகள் உயிர் தப்பிக்கொண்டனராம்.

குறிஞ்சாத்தீவுத் தாக்குதல் சம்பவம் முன்கூட்டியே தெரியாததால் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்ட பஸ் ஆனையிறவு முகாமை அடைந்தபோதுதான் சம்பவம்பற்றித் தெரியவந்ததாம்.

பிரஸ்தாப பஸ்வண்டி உடனடியாக யாழ். செல்ல அனுமதிக்கப்படாது இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டதாகவும், பிரயாணிகள் பணயக் கைதிகளாக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

சிலமணி நேரம் செல்ல போக்குவரத்திற்கு அனுமதிக்கப்பட்டதென்றும், அப்போது ஆனையிறவிலிருந்து குண்டுமாரி பொழிந்து கொண்டிருந்ததாகவும், சாரதி தமது சாதுரியத்தால் குறிஞ்சாத்தீவு உப்பள வீதியால் பஸ்ஸைத் திருப்பி இப்பகுதியிலுள்ள காட்டுப் பகுதியில் பஸ்ஸை நிறுத்தி பிரயாணிகளைப் பாதுகாத்தார் என்றும் கூறப்படுகிறது.

12 மணிநேரப் போராட்டத்தின் பின்னர் குறுக்குப் பாதைகளால் பஸ்ஸைச் செலுத்தி யாழ். திரும்பினராம்.

இதேவேளை பஸ்ஸில் பிரயாணம்செய்த பிரயாணிகள் பலர் அதிர்ச்சியிலிருந்து மீள முடியாதவர்களாக இருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

## மரண விசாரணை ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

ஓய்வூதியம் பெறச் சென்றபோது துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான மூவரின் மரண விசாரணை நேற்று முன்தினம் யாழ். மேலதிக நீதவான் கே பி.எஸ் வரதராசா முன்னிலையில் நடைபெற்றது.

மரணமான பென்சனியர் இளையதம்பியின் மனைவி சாட்சியமளித்தார். மரண விசாரணை நாளைவரை ஒத்திப் போடப்பட்டுள்ளது. [க]

## "94,000 பேரையும் சிறிமா கடலில் தள்ளுவாரா?"

### ஜனதிபதி கேட்கிருர்

[பொலநறுவ]

''திருமதி பண்டாரநாயக்காவுக்கு இந்நாட்டு இளைஞர்களை தொழில்நுட்ப யுகத்தினுள் அழைத்துச்செல்லும் அதிகாரமோ அல்லது ஆற்றலோ இல்லை. ஜனநாயகப் பாதையில் செல்லவோ அல்லது எமது திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்கவோ அவர் தயாராயுள்ளாரா?

94 000 நாடற்றவர்களைப் பற்றி அவர்என்ன செய்வார்? அம் மக்களை அவர் கடலினுள் தள்ளி விடுவாரா?

பொலநறுவ நகரில் நேற்று முன் தினம் நடைபெற்ற மாபெரும் கூட்டத்தில் பேசுகையில் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன மேற்கண்டவாறு கூறினர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே பிரதான எதிர்க்கட்சியாக இருப்பதாகவும், யூ. என். பி யின் சில கொள்கைகளைப் பின்பற்ற இக்கட்சி [ஸ்ரீ. ல. சு க] அண்மையில் முடிவு செய்ததைத் தாம் அறிந்ததாகவும், தலைமையைப் பொறுத்தே இந்த இரு கட்சிகளிடையே வேறுபாடு நிலவுவதாகவும் ஜனதிபதி தமது உரையின்போதுமேலும் கூறினர்.

''இந்நாட்டினை ஆளக்கூடிய தலைவர்என்றதகுதியில் திருமதி ஸ்ரீமாவோ இன்று இருக்கிருரா?'' எனவும் திரு ஜயவர்த்தன கேள்வி எழுப்பினர்.

## மயக்கமுற்றவர் யார்?

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக தேர்தல் அலுவலகத்தின் முன்றலில் நேற்றுக்காலை பிறப்புச்சாட்சிபபததிரம் நிரபபிககொண்டிருந்த சுமார் 45 வயதுடைய ஒருவர், மயக்கமடைந்தநிலையில் தேர்தல் அலுவலக உத்தியோகத்தர்களால் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் வைத்திருந்த பத்திரமொன்றில் வி. ஆர். ஆர். வேதாரணியம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளதென்றும் இவரிடமிருந்த சைக்கிள், குடை என்பன தேர்தல் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறதென்றும் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். [மா]

## இ.த ஆசிரியர்சங்கம் மீண்டும் தொழிற்சங்கமாக பதிவு

[யாழ்ப்பாணம்]

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மீண்டும் தொழிற்சங்கமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்று மேற்படி சங்கப்பொதுச் செயலாளர்திரு. த. மகாசிவம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்:

சங்கத்தின் புதிய தலைவராக ஆரைப்பற்றைஇராமகிருஷ்ண மிசன் தமிழ்கலவன்பாடசாலை அதிபர் க. சோமசுந்தரம் பணியாற்றுவார் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிககப்பட்டுள்ளது.

கலைக்கப்பட்ட சங்கத்தின் யாப்பினை மையமாகவும், அந்தநிர்வாகிகளை புதிய நிர்வாகிகளாகவும் பழைய உறுப்பினர்கள் புதிய உறுப்பினர்களாகவும், பழைய சங்கத்தின்அலுவலகம், சொத்துக்கள் புதிய சங்கத்தின் அலுவலகமாகவும், சொத்துக்களாகவும் கொண்டு சங்கம் இயங்குமெனவும் திரு. மகசிவம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இவ்வாரம் பதிவு செய்யப்பட்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு பதிவு எண்ணுக 5001 வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ரத்துச் செய்யப்பட்ட பின்னணி, அதைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விரிவான அறிக்கையொன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் சங்கத்தின் ஆட்சிக் குழுக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்படும். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பதிவுரத்துச்செய்யப்பட்டமை சங்கத்தின் நிர்வாகத் தவறினுல் அல்ல என்பது பற்றி ஆதாரங்களோடு நிரூபிக்கப்படும் என்றும் திரு. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

## புதிய இசை ஆசிரியர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தைச் சேர்ந்த ஏழு மாணவிகள் பொலன்நறுவை ரேயல் கல்லூரியில் ஆசிரிய சேவை முன்விரிவுரைகளை கடந்தமாதம் 21ம் திகதி முதல் இம்மாதம் முதலாம் தேதி வரை முடித்துக் கொண்டு நியமனம் பெற்றுள்ளனர் நியமனம் பெற்றவர்கள் விபரம்

சங்கீதம்:- செல்வி எஸ். கௌரி, செல்வி என். எம். வர்ணலாதேவி, செல்வி கே. சிவகுமாரி, செல்வி எஸ் ஜசிந்தா, செல்வி ரி. ஹேமாவதி, செல்வி ரி வாசுகி

நடனம்:- செல்வி எஸ். குமுதினி.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126

## மரண அறிவித்தல்

### தெய்வானைப்பிள்ளை சதாசிவம்

மட்டுவில் தெற்கு தெய்வானைப்பிள்ளை சதாசிவம் 18-2-86இல் காலமானர். இவர் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவகுரு, அன்னம்மா, இரத்தினம், சின்னராசா [மக்கள் வங்கி, சாவகச்சேரி], கமலாதேவி, இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியம் [ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர், மக்கள் வங்கி], பஞ்சரத்தினம், அன்னம்மா, புவனேஸ்வரி, காலஞ்சென்ற பாலசுந்தரம், வாமதேவன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 19-2-86 புதன்கிழமை [இன்று] பிற்பகல் 3 மணிக்கு குச்சுப்பிட்டி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ச. சின்னராசா

[C 850]

### திருமதி இலட்சுமிப்பிள்ளை சங்கரப்பிள்ளை

காலஞ்சென்ற திரு. வே. பொ. சங்கரப்பிள்ளையின் அருமை மனைவி இலட்சுமிப்பிள்ளை அவர்கள் 18-02-1986இல் சிவபதமடைந்துள்ளார். அன்னர் காலஞ்சென்ற வள்ளிநாயகி, திரு. பி. எஸ். செல்வரத்தினம் மரகதவல்லி [ஆசிரியை], திரு. பி. எஸ். குமாரசுவாமி [முன்னுள் அதிபர், யாழ். இந்துக் கல்லூரி], மங்கையர்க்கரசி [ஆசிரியை], கனகமணி, தவமணி [ஆசிரியை], சிவமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வேதாரணியம், பத்மாவதி, மாணிக்கம் [அதிபர்], சிவபாக்கியம் [ஆசிரியை], தங்கத்துரை [ஆசிரியர்], விஜயசிங்கராசா [ஆசிரியர்], சிற்சபேசலிங்கம், இராமலிங்கம் ஆகியோரின் மாமியாருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் [இன்று] 19-02-1986 புதன்கிழமை, 56/11, இந்துக் கல்லூரி ஒழுங்கை இல்லத்தில் பி. ப. 2-30 மணிக்கு நடைபெற்று கோம்பையன்மணல் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

தகவல்: P. S. குமாரசாமி

[C 852]

### நன்னித்தம்பி வைத்திலிங்கம் (துரை)

சங்குவேலி உடுவிலைச் சேர்ந்த திருவாளர் நன்னித்தம்பி வைத்திலிங்கம் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னர், காலஞ்சென்ற நன்னித்தம்பி அன்னப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகனும், வன்னியசிங்கம், வீரலட்சுமி, சரஸ்வதி, திருப்பதி ஆகியோரின் அருமைச் சகோதரனும், S ஹன்டி-ராஜகாரியர், காலஞ்சென்ற V. நடராஜா, திரு. V. S பீதாம்பரம் திருமதி சோதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், கமலா, விமலா, Dr N. ராஜபாலேந்திரன் [அவுஸ்திரேலியா] குமாரதாசன், அமிர்தன்-ராஜகாரியர் [சட்டத்தரணி] நளாயினி, மணிமேகலை, சிவபாலன், சிவகணேசன், ரோகினி, சிவகரன் ஆகியோரின் அருமை மாமனுரும் ஆவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 19-2-1986 புதன்கிழமை [இன்று] பிற்பகல் 2-00 மணிக்கு அன்னரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றுர், உறவினர் இத்தகவலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறேம்.

[C 849]

### பொன்னம்பலம் நடராசா

''லலித வாசம்'', புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த [இளைப்பாறிய ஆசிரியர்] பொன்னம்பலம் நடராசா காலமானர். இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மகேஸ்வரன் [உரிமையாளர், நல்லூர் ரேடேர்ஸ், கொக்குவில்], ரவீந்திரன் [ஓமான்], லலிதா, ராதா [ஆசிரியர், விவேகானந்த மகாவித்தியாலயம், கொட்டாஞ்சேனை], சந்திரா [சவூதி அரேபியா], பத்மா, நேசராசா [ஜேர்மனி], வரதராசா [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சம்பந்தர், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, குழந்தைவேலு, திலகவதி, துரையப்பா, இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடேசன் [நில அளவையாளர், பொலனறுவை], சிவராசா [ஜெயா ஆட் போட்டோ, சாவகச்சேரி], வசந்தரூபி, செந்தமிழ்ச்செல்வி, சிவலோஜினி ஆகியோரின் அன்பு மாமனுரும், மணிவண்ணன், மதிவண்ணன், சசிதேவா, துஷியந்தி, கேமலதா, தாரணி ஆகியோரின் பேரனுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 20-2-1986 வியாழக்கிழமை அன்னரது இல்லத்தில் நடைபெற்று, காலை 10 மணியளவில் தகனம் செய்வதற்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''லலித வாசம்'',
புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
18-02-1986.

தகவல்:
ந. மகேஸ்வரன்

[C 842]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org